# விக்கிரம சகாப்தம்

இரண்டாயிரம் ஆண்டுகள்

க. அ. நீலகண்ட சாஸ்திரி

குமரி மலர்
சென்னை

# விக்கிரம சகாப்தம்

## இரண்டாயிரம் ஆண்டுகள்

க. அ. நீலகண்ட சாஸ்திரி

சாது அச்சுக்கூடம்
சென்னை
1944

# விக்கிரம சகாப்தம்

## இரண்டாயிரம் ஆண்டுகள்

இந்தியநாட்டில் இன்று வழக்கத்திலுள்ள சரித்திர சம்பந்தமான சகாப்தங்களில் மிகவும் பழமையானது விக்கிரம சகாப்தம். முதலில் இது மாளவ அப்தம் என்றும், சம்வத் என்றும் வழங்கிவந்தது. கலியுக சகாப்தம் என்பது வான நூலை ஒட்டிய ஒருவெறும் கணக்குத்தான். மௌரிய சகாப்தம் என்று ஒன்று இருந்ததாகச் சொல்லுகிறார்கள் ; இதற்கான சான்றுகள் ஏற்கத்தக்கனவாயில்லை. ஜைன சம்பிரதாயத்தில் விக்கிரமாதித்த சக்கரவர்த்தி, உஜ்ஜயினி நகரத்து சகாரி என்று சொல்லப்பெறுகிறான். இவனைப்பற்றிய நூல்கள் சமீப காலத்திய கட்டுரைகளாகவே கிடைக்கின்றன. இந்த விக்கிரமாதித்தனைக் குறித்து சரித்திரமானது இன்னும் நிச்சயமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் விக்கிரம சகாப்தம் இருந்து வருவதும், அது தோன்றிய காலமும் மறுக்கமுடியாத உண்மைகள். இந்திய நாடு முழுவதும் இந்தச் சகாப்தத்தின் இரண்டாயிரமாவது ஆண்டு விழா சமீபத்தில் கொண்டாடப்பெற்றது. இக்கொண்டாட்டமானது, பூர்ண சுயராஜ்யம் அடையவேண்டும் என்று மக்களுக்குள்ள ஆர்வத்தின் மிகுதியைப் புலப்படுத்துகிறது. இந்தச் சந்தர்ப்பத்தை நினைவு கூரும்பொருட்டு இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தியக் கலையிலும், நாகரிகத்திலும் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளை யெல்லாம் விளக்கித் தொகுத்து, மனித

வாழ்க்கையின் வெவ்வேறு துறைகளிலே உலகமெங்கும் அறிவும் அனுபவமும் வளர்ந்து வருவதற்கு நாம் எவ்வளவு உதவியிருக்கிறோம் என்பதைப்பற்றிய விவரங்களையும் இதற்கு அடிப்படையாயிருந்த பொதுவான சரித்திர நிலையையும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

விக்கிரம சகாப்தம் கி. மு. 57-6-ஆம் ஆண்டில், அதாவது இந்திய சரித்திரத்தின் நீண்டகால வாழ்விலே ஏறக்குறைய பாதிகாலம் பின்னிருந்தே, தொடங்குகிறது. அக்காலத்துக்குள், ஆரிய நாகரிகமும் அதற்கு முந்தி நிலவியிருந்த நாகரிகமும் நல்ல முறையிலே ஒன்றாய்க் கலந்துபோய் இந்நாட்டின் பொதுவான தேசியப் பண்பாட்டுக்கு ஏற்ற கால்கோள் விழா நிறைவேறிவிட்டது. அது மட்டுமல்ல ; இவ்வாறு கலந்த மக்களினத்தார் அதிகமான சரித்திர அனுபவத்தைப் பெற்று உலகத்திலே நாகரிகத்தின் முன்னணிக்கு வந்துவிட்டார்கள். அரசியல் துறையிலே இந்திய சரித்திரத்தில் தோன்றிய முதலாவது பெரிய சாம்ராஜ்யம் என்று சொல்லத்தக்கது மௌரியசாம்ராஜ்யம். இது மேற்சொன்ன காலத்துக்குள்தோன்றி மறைந்துவிட்டது. அந்தச் சாம்ராஜ்யம் இருந்த நூறு ஆண்டுகளும் மிகவும் சிறப்புப் பொருந்திய காலம் என்ற நினைவு மட்டுமே எஞ்சி நின்றது. பாரதவர்ஷம் முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவர வேண்டும் என்ற நெடுங்காலத்துக் கனவுகளை யெல்லாம் மேற்சொன்ன மௌரிய காலமானது நனவாக்கியது. அப்போது, சிற்சில நாடுகள் குடியரசு முறையிலே செவ்வையாக ஆண்டு வரப்பெற்றன. ஆயினும், முடியரசு ஏற்படுவதற்கேற்ற தேச நிலையே வலிவு பெற்றிருந்தது. பாரசீகத்தார், கிரேக்கர், சகர், பாலவர் ஆகியோரோடு தொடர்பு ஏற்பட்டது. அவர்களுடைய தன்மையை உணர்ந்து, அவர்

களை இந்நாட்டினர் தன் மயமாக்கி விட்டார்கள். தரைமூல மாகவும்,கடல்மூலமாகவும் மேலைநாடுகளுடன் மும்முரமான வியாபாரம் நடைபெற்று வந்தது. புதிய கருத்துக்களும் விரைவிலே அங்கிருந்து இங்கு வந்து சேர்ந்தன. கீழ்த்திசை நாடுகளுடன் அப்போது சம்பந்தம் ஆரம்பமாயிற்று. ஆரம்பமாகாவிட்டாலும், அத்தொடர்புக்குரிய காலம் சமீபத்திலேயே இருந்தது. நாட்டின் புது இதிகாசங்க ளான இராமாயணமும், மகாபாரதமும் உருவடைந்துவிட் டன. சமுதாய லட்சியமான தருமத்தைப்பற்றி வரையறை யான உணர்ச்சி ஏற்பட்டது. மனித வாழ்க்கையின் பல வேறு துறைகளிலும் தருமத்தைப் பின்பற்றிய ஒழுக்கம் வற் புறுத்தப்பட்டு வந்தது. இன்று நாம் இந்துக்கொள்கைகள் என்று திட்டமாகச் சொல்லுபவை யாவும் - பிறப்பு, கரு மம், வருணாசிரமம், பாவ புண்ணிய மோட்சங்கள், எக்ஞ தான தவங்கள், ஞானம், யோகம், பக்தி என்பன யாவும் - வளர்ந்து அசைக்கமுடியாதபடி மக்கள் மனத்தில் இடம் பெற்றுவிட்டன. புதிய நெறிகளை வகுக்க வேண்டுமென்று எண்ணிய சிறந்த சீர்திருத்தவாதிகளான மகாவீரர், புத்தர் முதலியவர்கள் கூட இவற்றை ஒதுக்கிவிட முடிய வில்லை. சம்ஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளில் விரிவான சமய இலக்கியம் தோன்றிவிட்டது. அறிவுத் துறையிலும் கலைகளிலும், பிற்காலத்தில் என்றுமே கைவர முடியாத நுட்பங்களெல்லாம் அன்று கைவந்திருந்தன. போர்த்தொழில், பிறதொழில்கள், கலைகள் ஆகிய அனைத் திலும் மேலான பயிற்சியும் கல்வியும் தருவதற்கான சிறந்த நிலையங்களாகத் தட்சசிலையும், வாராணசியும் விளங்கின. தத்துவ ஆராய்ச்சித் துறையிலே முக்கியமான கோட்பாடு கள் யாவும் கருத்தளவில் உருவடைந்திருந்தன. கீதை பிறந்து விட்டது. சிட்சை, வியாகரணம், நிருத்தம்

ஆகியவைபற்றிய எளிமையான நூல்கள் தொடங்கி, சம்ஸ்கிருத இலக்கணமும், ஒலிக்குறிப்பு நூலும், பாணினி முனிவர் அவரைப் பின்பற்றி வந்த கார்த்தியாயனர், பதஞ்சலி ஆகியோர் வரையில் வளர்ந்துவந்த ஆசாரிய பரம்பரையினரால், எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் காண முடியாத அற்புதமான பூரண அமைப்பை உடையனவாக ஆக்கப்பட்டன, கவிதையும், நாடகமும், இசையும், நடனமும் சிறப்பாக வளர்ந்திருந்தன. வானநூல், கணிதம், சத்திர சிகிச்சை உள்ளிட்ட வைத்திய நூல் ஆகியவற்றில் ஒப்பற்ற திறமை கைவந்திருந்தது. க்ஷேத்திர கணிதத்தின் நுட்பங்களைச் சுல்வ சூத்திரங்கள் காட்டுகின்றன. அசோக ஸ்தூபிகளும், பார்ஹுத்திலும் காஞ்சியிலுமுள்ள ஸ்தூபங்களும், பாடலிபுத்திரம், காசி, கோசி ஆகிய இடங்களில் நிலத்தை அகழ்ந்து காணப்பெறும் சிற்பங்களும், கல்லாலும் மண்ணாலும் கட்டிடம்கட்டும் தொழிலிலும் சிற்பத் தொழிலிலும் அன்றைய மக்களுக்கு இருந்த அரிய திறமையைக் காட்டுகின்றன. அசோக மன்னன் எழுப்பிய கல்தூண்களின் மேற்புறத்திலுள்ள அற்புதமான வழுவழுப்புத் தன்மையை இன்று எவ்விதத்திலும் செய்ய முடியாது என்பது எல்லோரும் அறிந்தது. இந்த அருங்கலைகளில் சிலவற்றை இந்திய நாடு அயல் நாடுகளினிடம் கற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் அவற்றைத் தனது சொந்த இயல்புகளோடு எவ்வாறு இயைத்துக்கொள்வது என்பதை இந்நாடு செவ்வையாய் உணர்ந்திருந்தது. தான் பெற்றவற்றிற்குப், பதிலாக இன்னும் மேலான கலைகளை அக்காலத்திலும் பிற்பட்ட காலங்களிலும் அவ்வயல் நாடுகளுக்கு இந்நாடு அளிக்கும் திறமை பெற்றிருந்தது.

விக்கிரம சகாப்தம் தொடங்கி இன்றுவரையில் கடந்துபோன இரண்டாயிரம் ஆண்டுகளும் இயல்பாகவே சமமான இரண்டு பகுதிகளாய் உள்ளன. முதற் பகுதியிலே

பலவேறு துறைகளிலும் மக்கள் ஆக்க வேலைகளையும் முன்னேற்றத்துக்கான தொழில்களையும் தொடர்ந்து செய்துவந்திருப்பதைக் காண்கிறோம். வெவ்வேறு வழிகளிலே புதிய லட்சியங்களையும், முன்னிலும் சிறப்பான லட்சியங்களையும் அடையும் பொருட்டு இந்தியமக்கள் மகிழ்ச்சியோடு மேற்கொண்ட வெற்றிகரமான முயற்சியே ஆயிரம் ஆண்டுகள் கொண்ட முதற் பகுதியின் சரித்திரமாகும். இந்திய நாகரிகம் விரிந்து முன்னிலும் பரந்த நிலப்பரப்பெங்கும் பரவுகிறது. ஒரு புறத்தில் மத்திய ஆசியா ; மற்றொரு புறத்தில் கடல் கடந்து இந்து சீனம், அதையடுத்த தீவுகள் வரையில் பரவுகிறது. இவ்வளவிலும் போர் சிறிதுமில்லை. பிற நாடுகளைச் சுரண்டுவது அறவேயில்லை. இதற்குக் காரணம் இந்தியா முழுமையும் ஆரியமும், ஹிந்து மதமும், நாகரிகமும் பரவும்படிச் செய்த முதல் உணர்ச்சிதான் பிற நாடுகளிலும் பரவிற்று என்பதாகும். இந்திய மாலுமிகள் இந்திய சமுத்திரத்தில் தோன்றிய பருவக் காற்றுகளை அறிந்திருந்தார்கள். கீழ்த் திசையிலுள்ள ஹிந்துக் குடியேற்ற நாடுகளோடும் மேல் திசையிலுள்ள பாரசீகம், அரேபியா, ஆப்ரிக்கா ஆகிய நாடுகளோடும் இம்மாலுமிகள் இடைவிடாத தொடர்பு கொண்டிருந்தார்கள். இந்தியக் கட்டிடக் கலையும் சிற்பக் கலையும் வெகு தொலைவிலுள்ள ஸேடன்வரையில் சென்றன. தென் இந்திய எழுத்துக்களிலிருந்து ஜப்பானிய நெடுங்கணக்கு சில அம்சங்களைக் கற்றுக்கொண்டது. கிறிஸ்து பிறந்தபின் முதல் சில நூற்றுண்டுகளில் ரோம ராஜ்யமெங்கும் இந்தியாவிலிருந்து சென்ற மெல்லிய ஆடைகளுக்குக் கிராக்கி இருந்தது. இதன் காரணமாக அந்நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் அங்குள்ள தங்கமெல்லாம் நாட்டைவிட்டுப் போய்விடுகிறதே என்று பிரலாபித்தார்கள். அந்நாட்டு நீதி நிபுணர்கள் பெண்களிடையே ஆடம்பரமும் நாணமின்மையும் வளர்கின்றனவே என்று அங்கலாய்த்தார்கள்.

இதற்குமேல் சொல்லவா வேண்டும்? ஆனால் அயல் நாட்டு வியாபாரத்தின்மூலம் இந்தியாவிற்குக் கிடைத்தது தங்கம மட்டுமல்ல. திராட்சை ரசம் கிடைத்தது. இந்திய மன்னர்களுடைய அரண்மனையில் பணியாளராயும், வாயில் காவலராயும் அமர்த்துவதற்கேற்ற யவனப் பணிப் பெண்கள் ஏராளமாய்க் கிடைத்தனர். ஆகவே, இந்த முதல் பகுதியில் இந்தியாவானது, ஆசியா அனைத்துக்கும், அதன் மூலமாக ஐரோப்பாவுக்கும், ஒரு கல்விச் சாலையாக விளங்கி, உலகத்தின் நன்மைக்காகத்தான் நம் நாடு எவ்வளவோ தியாகம செய்தது என்று சொன்னால் அது மிகையல்ல.

விக்கிரம சகாப்தம் தொடங்கிய காலத்தில் சாதவாகன சாம்ராஜ்யமானது இன்னும் மேலோங்கி நின்றது. சகர்களோடு அவர்கள்செய்த போர்களைச் சாசனங்கள் சொல்லுகின்றன. பிற்பட்டுத் தோன்றிய பழங் கதைகள் விக்கிரமாதித்திய சகாரி பிரதிஸ்தானத்திலிருந்து உஜ்ஜயினிக்கு வந்தானென்று சொல்லுகின்றன. ஆகவே உஜ்ஜயினியிலிருந்து சகர்களை ஓட்டியதில் சாதவாகனர்களுக்கும் பங்கு இருந்திருக்கக்கூடும். கடல் வியாபாரத்தில் அவர்களுக்கு ஆர்வம் அதிகம். சுமாரான கப்பற்படையொன்றும் அவர்கள் வசமிருந்தது. இந்தியாவின் மேல் கரையில் ஆண்ட்ராபொலிஸ் என்பது ஒரு முக்கியமான வியாபாரஸ்தலம் என்று கிரேக்க நூல்கள் தெரிவிக்கின்றன. இரட்டைப் பாய்மரம் உடைய கப்பல் வடிவமெழுதிய ஆந்திரநாட்டு நாணயங்கள் பல இருந்தமை யாவருக்கும தெரியும். இன்னும், புகழ்பெற்ற பௌத்த ஆசாரியரான நாகார்ஜுனருக்கு நண்பராயிருந்த சாதவாகன மன்னனை திரிசமுத்திராதிபதி என்று பாணர் கூறுகிறார்.

தென்கீழ்த் திசையிலுள்ள ஆசிய நாடுகளில் ஹிந்து இந்தியாவிலிருந்து குடியேற்றம் தொடங்கிய காலமானது தக காணத்தில் சாதவாகனர்கள் ஆண்டுவந்த காலம் என்று

நாம் நிச்சயமாக நம்பலாம். ஆனால் இதற்கு நேர்முகமான ஆதாரம் எதுவும் இப்போது இல்லை. பொதுவாக மகத நாட்டையொட்டி இல்லாவிட்டாலும், வட இந்தியாவை அடிப்படையாக வைத்துத் தொகுக்கப்பெற்ற புராண சம்பந்தமான அரச பரம்பரைகளில் இவர்கள் சொல்லப் பெற்றிருக்கிறார்கள். சாதகர்ணியைக் குந்தலன் என்று வாத்ஸ்யாயனர் கூறுகிறார். இது அவர்களுடைய நாடு எவ்வளவு விரிந்திருந்தது என்பதைப் புலப்படுத்துகிறது. கட்டிடத் தொழிலிலும், சிற்பக் கலையிலும் இவர்கள் எவ்வளவு அரிய வேலைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதற்குக் கஞ்சியையும், நாசிக்கையும், அமராவதியையும் பெயரளவில் குறிப்பிட்டாலே போதும். அமராவதிச் சிற்பங்கள் கிரேக்க ரோமச் சாயல்களைக் கொண்டிருக்கின்றன. இதன் காரணம், ரோம நாடுகளோடு அன்றிருந்த கப்பல் வியாபாரமாகும். ஹாலனுடைய சப்தசதி என்பது பலர் பாடிய பிராகிருதப் பாடல்கள் அடங்கிய ஓர் அழகிய தொகுதி. இந்திய இலக்கியச் சரிதத்தில் இதற்குத் தனியான இடமுண்டு. இதனுடைய முக்கியமான சிறப்பு, இதன் நடை மட்டுமல்லாமல், சாதவாகன சமூகத்தில் உயர்ந்த மக்களுடைய வாழ்க்கையை இது படம் பிடித்துக் காட்டுகிறது என்பதாகும். இவ்வாறு காட்டும் படமானது அவ்வாழ்க்கையில் ஒரு சாயல்தான்.

சகர்களுடன் புரிந்த போர்களில் இந்திய மன்னர்களுக்கு முழு வெற்றி கிடைக்கவில்லை. கி. பி. முதல் சில நூற்றாண்டுகள் வரையில் கத்தியவாடும், குஜராத்தும், மாளவ நாட்டில் உஜ்ஜயினி முதலான பகுதிகளும் சகர்களுக்கு உட்பட்டே இருந்து வந்தன. இந்த நிலை, நான்காம் நூற்றாண்டில் புகழ்பெற்ற குப்த சக்கரவர்த்தியான இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்தன் அவர்களை முறியடிக்கிற வரையில் இருந்து வந்தது. வடமேற்கில் சிற்றரசர்களான

இந்து கிரேக்கர்களும் பார்த்தியர்களும் மறைந்து குஷான சாம்ராஜ்யம் தோன்றிற்று. மத்திய ஆசியாவில் பெரும் பகுதிகளும், கங்கை நதிப் பள்ளத்தாக்கும் இதனுள் இருந்தன. ஒருகால் மகதம் வரையிலும்கூட இது பரவியிருந்திருக்கலாம். மேற்கு இந்தியாவிலிருந்த சகர்களும் சிறிது காலம் குஷானர்களின்கீழ்ச் சிற்றரசர்களாக இருந்தனர் என்பதில் ஐயமில்லை. அன்னியர்களாக இந்தியாவில் நுழைந்த குஷானர்கள் மிக விரைவில் ஹிந்துக்களாயினர். வாழ்க்கையின் பல துறைகளிலும் கனிஷ்க மன்னனுடைய ஆட்சி சிறப்பான ஒரு காலமாகும். ரோம ராஜ்யத்தோடு வியாபாரம் மும்முரமாக நடந்துவந்தது. கனிஷ்க நாணயங்கள் இந்தியாவிலிருந்து நெடுந்தூரம்வரையில் சென்றன. கெய்சர் என்ற பட்டத்தையும் அவன் தரித்துக் கொண்டான். காந்தார நாட்டுக் கலை அன்று உச்ச நிலையில் இருந்தது. இந்தக் கலையின் சின்னத்தைக் கீழ் நாடுகளில் பௌத்த சமயத்தைத் தழுவிய ஒவ்வொரு நாட்டிலும் காண்கிறோம். நாலாவது புத்த சங்கமானது மகாயான புத்த சமயத்தில் புதிய அபிவிருத்திகளையெல்லாம் செய்வதை அனுமதித்துப் புத்தக் கோட்பாடுகளையே முற்றிலும் திருத்தி அமைத்தது. கவிதை, நாடகங்களில் அசுவகோஷரும், வைத்தியத்தில் சரகரும் கனிஷ்க மன்னனோடு நெருங்கிய தொடர்பு பெற்றிருந்தார்கள்.

இந்தக் காலத்தில் வட கிழக்கு இந்தியாவைப் பற்றி நமக்குத் திட்டமாக ஒன்றும் தெரியவில்லை. ஆயினும் தென் கோடியிலே, மிகப் பழமையான தமிழ் நூல்களில் காணும் மக்கட் சமூகத்திலே ஆரியமானது அனேகமாய் முழுமையும் பரவியிருப்பது புலப்படுகிறது. அரசியலிலே அங்கு சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், குறுநில மன்னர்களும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். பொருளாதாரத் துறையில் சிற்றூர்கள் சுய ஆட்சிபெற்றனவாய்த் தெரிகின்

றன. நகர வாழ்க்கை அபிவிருத்தி பெற்றிருக்கிறது ஜைனமும், பௌத்தமும் முற்றிலும் பழக்கமில்லை என்று சொல்ல முடியாவிட்டாலும், இன்னும் பின்னணியில்தா னிருந்தன. பிராம்மண சமயமே செல்வாக்குப் பெற்றிருந்தது. பழந் தமிழ் இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் ஐந்திரவியா கரணம் உணர்ந்தவராகச் சொல்லப்படுகிறார். அகஸ்தி யரைப்பற்றிய கதைகளும் தெரியாமலில்லை. ஆயினும் பிற் காலத்தில் அவை பரந்துள்ள அளவு அப்போது பரவ வில்லை. ரோம நாட்டோடு வியாபாரம் நடந்தது. கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளைச்சேர்ந்த தங்கம், வெள்ளி முதலிய ரோம நாணயங்கள் பல கிடைக்கின்றன. இவை அவ்வியாபாரத்துக்குச் சான்று பகர்கின்றன. தவிர, ரோம அடையாளங்கள் போட்ட சில்லறைக் காசுகள் ஏராள மாய்க் கிடைக்கின்றன. இவற்றால் ரோம நாட்டிலிருந்து வியாபாரிகளும், தொழிலாளிகளும், பிறரும் இங்கு ஏராள மாக வந்து ஆங்காங்குக் குடியேறினர் என்று கருதலாம். இலங்கையிலுள்ள நிலைமையும் ஏறக்குறைய தென் இந்தி யாவில் இருந்த நிலைமையை ஒத்ததேயாகும். ஆனால் அங்கு பௌத்தம் இன்னும் வலிமை பெற்றிருந்தது. மேற்குறித்த காலத்தில் அந்நாடு இருந்த நிலைமையைப்பற்றி நாம் அறிவ தவ்வளவும் பௌத்த ஆதாரங்களிலிருந்து கிடைப்பதாகும். கீழ்த்திசையிலே சென்று குடியேறியதில், தக்காணத்தில் உள்ளவர்களைப் போலவே தென்னிந்தியாவிலும் இலங்கை யிலும் உள்ளவர்களுக்கும் பங்குண்டு.

கி. பி. நாலாவது ஐந்தாவது நூற்றாண்டுகளில் வட இந் தியா முழுதும் பரவியிருந்த குப்த சாம்ராஜ்யம் நமது தேச சரித்திரத்தில் அடுத்த முக்கிய காலமாகும். இந்திய சரித் திரத்திலேயே அதுவே மிக்க புகழும் சிறப்பும் வாய்ந்த காலம் என்று சொல்வது முற்றிலும் பொருந்தும். அந்த வம்சத்தில் சமுத்திரகுப்தனும் அவனுடைய மகன் இரண்

டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்தனும் ஒப்பற்ற மன்னர்களாயிருந்தனர். இவர்கள் ஆட்சிக் காலம் ஏறக்குறைய ஒரு நூற்றண்டு (330-415) இருந்தது. சமுத்திரகுப்தன் பல நாடுகளை வென்றவன். தக்காணத்தில் அவன் படையெடுத்து வெற்றிகொண்ட பிரதேசத்தைத் தற்கால ஆராய்ச்சியாளர்கள் காரணமின்றிக் குறைத்துவிடுகிருர்கள் என்று எண்ண இடமிருக்கிறது. அவனே கவிஞனுகவும், இசை வல்லவனுகவும், சமய தத்துவம் உணர்ந்தவனுகவும் இருந்தான். தனக்குப்பிறகு அரசபாரத்தைத் தாங்கச் சந்திரகுப்தனே தக்கவன் என்று அவன் கருதினுன். அப்படியே சந்திரகுப்தனும் தந்தை மேற்கொண்ட காரியங்களை நிறைவேற்றி விக்கிரமாதித்தன் என்ற பட்டத்தைத் தரித்தான். இந்த நாடெங்கும் யாத்திரைசெய்த பாஹியன் என்பவர் நாட்டில் நிலவிய செங்கோன்மையைப் புகழ்ந்து சொல்லுகிருர். பௌத்த சமயத்திலும் இலக்கியத்திலும் புகழோடு விளங்கிய வசுபந்து என்பவரும் நம் நாட்டுக் கவிஞருள் சிறந்தவரான காளிதாசரும் இதே காலத்தில் தான் வாழ்ந்தார்கள். நாடகாசிரியரான விசாகதத்தரும், சம்ஸ்கிருதத்தில் தோன்றிய ஒரே உண்மைச் சமூக நாடகமாகிய மிருச்சகடிகத்தை எழுதிய சூத்ரகரும் அனேகமாய் இக்காலத்தில்தா னிருந்திருக்கவேண்டும். புராணங்களில் முக்கியமானவை இக்காலத்திலேயே திட்டமான உருவடைந்தன. ஆரியபடரும், வராகமிகிரரும் அக்காலத்தில் உலகெங்குமே கண்டிராத அளவுக்கு இந்தியக் கணித நுட்பங்களையும், வானநூல் நுட்பங்களையும் கண்டார்கள். இப்படிப்பட்ட காலத்தின் சின்னங்கள் யாவும் கால வேகத்தினுலும், அசட்டை காரணமாகவும் பிற்காலத்துக்கொடுங்கோன்மை காரணமாகவும் எப்படியோ அறவே அழிந்து போயின. ஆயினும், எஞ்சி நிற்பதைக்கொண்டே, நமது பண்டைக் கலை வளர்ந்த பரம்பரையில் எவ்வளவோ அழிந்து போய் விட்டது என்ற நினைவு நம்மைத் துன்புறுத்திக்கொண்

டிருக்கிறது. சாரநாத்தில் உள்ள அமர்ந்த கோலமுடைய புத்த உருவம், டில்லியிலுள்ள இருப்பு ஸ்தம்பம், சுல்தான கஞ்சில் கிடைத்த செப்புப் புத்த விக்கிரகம், சிலவகைத் தங்க நாணயங்கள் இவைகளே இன்று எஞ்சியுள்ளன. அக் காலத்தில் கலைஞர்களுக்கு வெவ்வேறு துறைகளில் எவ்வளவு நுட்பமான கைவன்மை வாய்ந்திருந்தது என்பதை இவை ஒரு சிறிது காட்டுகின்றன. அஜந்தா குகை ஓவியங்கள் மேற்சொன்னவற்றோடு ஒத்த காலத்தவை. இலங்கையைச் சேர்ந்த சிகிரியாவிலும் மற்றும் எல்லோரா, காஞ்சி, சிற்றன்னவாசல் முதலிய இடங்களிலுமுள்ள ஓவியங்கள் காலத்தாற் சற்றுப் பிற்பட்டவை. இவ்வோவியங்களின் அமைப்பிலுள்ள பூர்ணமான சிறப்பும், நிற அமைப்பிலும் அலங்கார விவரத்திலும் அமைந்துள்ள ஒப்பற்ற அழகுணர்ச்சியும் உலகம் முழுவதுமே பாராட்டுகிறது. பிற்காலத்தில் ஆசியா கண்டம் முழுவதுமே தனது ஒப்பற்ற அறிவொளியை வீசிய நாலந்தா கலாசாலையானது அக் காலத்தில்தான் மெல்லத் தோன்றிக்கொண்டு வந்தது.

1932-இல் மத்திய ஜாவாவில் கிடைத்த இரண்டாம் சந்திரகுப்த நாணயம் மேற்கு ஜாவாவில் உள்ள பூர்ண வர்ம சாசனங்கள், சம்பாவிலுள்ள ஸ்ரீமாற வம்சத்தார் சாசனங்கள், போர்னியோவில் உள்ள மூலவர்மன் சாசனங்கள் முதலியவை இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து கீழ்த்திசை நாடுகளில் போய்க் குடியேறும் இயக்கம் கிரமமாக வளர்ந்து வந்தது என்பதைக் காட்டுகின்றன. சயாம், கம்போடியா நாடுகளுக்குரிய பழங் கலைகளில் குப்த சிற்பக் கலையின் சாயல்கள் புலப்படுகின்றன.

புஷ்யமித்திரர்கள் செய்த கலகத்தினாலும், ஹூணர்கள் படையெடுப்பினாலும் குப்த சாம்ராஜ்யம் அழிந்து ஒரு சிற்றரசாக ஆகிவிட்டது. மிக விரைவிலே மாளவ நாட்டில் வளர்ந்துவந்த யசோதர்மன் ஆட்சியானது ஹூணர் வலிமை

யைத் தடுத்து ஏக சக்ராதிபத்தியத்தை மீண்டும் சிறிது காலத்திற்கு நிலை நாட்டியது. இதில் குப்த மன்னனான நரசிம்ம பாலாதித்தன் யசோதர்மனுக்குத் துணை நின்றிருக்கவேண்டும். சீனச் சட்ட நிபுணரான யுவான் சுவாங் என்பவர் ஒரு நூற்றாண்டுக்குப் பின் இந்தியாவில் நெடுங் காலம் தங்கினார். இந்தியாவை ஹூணர்களிடமிருந்து விடுவித்தவன் நரசிம்மகுப்தன் என்று அவர் சொல்லுகிறார். ஆனால் உண்மையில், போர்க்களத்தில் போராடிய படைகளின் வீரத்தைக் காட்டிலும், ஹிந்து மதத்தின் சக்தியே அதிக வலிவுடையதாக இருந்தது. இது அமைதியாக யாவற்றையும் தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொண்டது. ஹூண ஜாதியினர் ஐரோப்பாவில் சென்ற இடமெல்லாம் அழித்துத் தீயிட்டு மக்களைக்கொன்று குவித்தார்கள். இரக்கமற்ற கொடுங்கோன்மைக்கும் நாசத்திற்கும் எடுத்துக்காட்டாக அவர்கள் சொல்லப் பெற்றார்கள். அத்தகைய ஹூணர்களை ஹிந்து மதமானது இரண்டொரு தலைமுறைகளுக்குள் ஹிந்துக்களாகவும், க்ஷத்திரியர்களாகவும், வைசியர்களாவும் மாற்றிவிட்டது! மத்திய இந்தியச் சரித்திரத்தில் வரும் ராஜபுத்திர வம்சத்தார் அனைவரும் ஹூணர் கால்வழி வந்தவர்கள் என்பதில்லை. ஆயினும் அந்த வழியும் சில ராஜபுத்திர வம்சத்திலாவது கலந்திருந்தது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

கி. பி. ஆறாவது நூற்றாண்டின் பிற்பாகத்திலும், ஏழாம் நூற்றாண்டின் முற்பாகத்திலும், பிற்பட்ட குப்தர்களும், மௌகரியர்களும், வர்த்தனர்களும் வட இந்தியாவைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டு, எஞ்சிநின்ற ஹூணர்களோடு சதா போரிட்டு வந்தார்கள். காலவேகத்தினாலே ஹர்ஷ வர்த்தனன் தன் முன்னோர் நாட்டையும் மௌகரியர் நாட்டையும் சேர்த்து ஆட்சி செய்யத் தொடங்கியவரையில், இப்போர்கள் நிகழ்ந்துவந்

தன. ஹர்ஷன் சிறந்த போர் வீரன். அரச நிர்வாகத்தில் வல்லவன். அரிய கவிஞன். பாணன், மயூரன் ஆகிய கவிஞர்களை ஆதரித்த வள்ளல். யுவான் சுவாங்கோடு நட்புப் பூண்டு ஆதரித்தவன். சுதந்திர இந்தியாவில் தோன்றிய மிகச் சிறந்த ஹிந்து மன்னர்களுள் அவனே கடைசியாக ஆண்டவன் என்று சொல்லுகிறார்கள். இது அத்துணைப் பொருத்தமன்று. தக்காணத்தில் இவன் படையெடுத்த பொழுது சகல தட்சிணபதேசுவரன் என்பவன் இவனுடைய படையெடுப்பைத் தடுத்துவிட்டான். சகல உத்தராபதேசுவரனான ஹர்ஷனுக்குப் போட்டியாக இவனுடைய புகழ் இருந்ததென்று கருத இடமுண்டு.

தக்காணத்தில் சாதவாகன அரசு அழிந்தபின், பல வம்சங்கள் தோன்றின. வடக்கிலே வாகாதகரும், தென் மேற்கில் கடம்பரும் குறிப்பிடத் தக்கவர்கள். கீழ்த் தக்காணத்தில் இக்ஷ்வாகுக்களும், சாலங்காயனரும், விஷ்ணுகுண்டினரும் தோன்றினார்கள். இவர்களுக்குத் தெற்கிலும் மேற்கிலும் ஆதிப்பல்லவர்கள் ஆண்டார்கள். ஆந்திரர்கள் அழிந்த பின் மூன்று நூற்றாண்டுகள்வரை தொடர்பான சமூக வளர்ச்சியிலும் நாகரிக வளர்ச்சியிலும் எவ்விதத் தடையுமில்லை. சமுத்திரகுப்தனுடைய படையெடுப்பானது அரசியல் வாழ்க்கையில்கூட எவ்விதப் பெரும் மாறுபாட்டையும் உண்டாக்கவில்லை. இக்ஷ்வாகுக்களின் ஆட்சியில் பௌத்தக் கலை ஓங்கி வளர்ந்தது. காவேரி நதிக் கரையில் பலஇடங்களில் பௌத்தவிஹாரங்கள் தோன்றிப் பாலி மொழியில் இலக்கியத்தை வளர்த்தன. இலங்கையும் தென்னிந்தியாவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. இவ்விரு நாடுகளும் கீழ்த் திசையிலுள்ள குடியேற்ற நாடுகளோடும் தொடர்பு கொண்டிருந்தன. இக்காலத்தில் ஜைன சமயம் வளர்ந்தோங்கி வந்திருக்கிறது. தமிழ்நாட்டில் ஓரளவுக்கு அது காலூன்றியிருப்பதைக் காண்கிறோம்.

அடுத்த நூற்றுண்டின் தொடக்கத்தில் மேலைத் தக்காணத்தில் அது நிலைத்துவிட்டது.

ஆரும் நூற்றுண்டின் முடிவிலும், அடுத்த நூற்றுண்டின் தொடக்கத்திலும், தென்னிந்தியாவிலும் தக்காணத்திலும் அரசுரிமையானது மீண்டும் ஒருவகையாக ஒழுங்கு பெற்றிருக்கிறது. இதன் பிறகு வந்த அரச பரம்பரைகளின் சரித்திரம் திட்டமாகத் தெரிய வருகிறது. இதன் பின் துங்கபத்திரா நதியே இவற்றுக்கு இடையிலுள்ள எல்லையாக நிற்கிறது. இதன் இருபுறமும் தோன்றிய பேரரசர்கள் ஒருவரோடு ஒருவர் போராடுவதிலே மோகங் கொண்டிருக்கிருர்கள். ஆற்றுக்கு இருபுறமும் எதிரிடையாக இல்லாமல் சற்றுத் தள்ளியுள்ள நாட்டு மன்னர்கள் சமயத்துக்கு ஏற்றபடி, போர் புரியும் அரசர்களுள் எவராவது ஒருவருக்குத் துணை நிற்கிருர்கள். இன்னும் தெற்கே சென்ருல், பாண்டியருக்கும் பல்லவர் சோழருக்கும் இடைவிடாத போர்கள் நிகழ்கின்றன.

கி. பி. 1200 வரையில் இதே கதைதான். அதன்பின் இந்திய தீபகற்பத்தின் அரசியல் நிலை மாறுகிறது. ஹர்ஷ மன்னன் இறந்ததுமுதல் டில்லியில் சுல்தான் ராஜ்யம் நிறுவப்பெறுகிறவரையில் இப்படிப்பட்ட ஓயாத சண்டைகளில் ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகள் கழிகின்றன. நமது அர்த்த சாஸ்திரம் எழுதியவர்கள், விஜிகீஷு என்ற நியாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று போதித்து வந்தார்கள். இது எவ்வளவு கேடானது என்பதை இந்நூற்றுண்டுகளின் சரித்திரம் காட்டுகிறது. இதன்படி, மன்னனெருவன் தான் அடிமையாகாமல் இருக்கும் பொருட்டு மற்றவனை வென்ருே கொன்ருே அடிமையாக்க வேண்டும். அடுத்தடுத்துள்ள இரண்டு நாடுகள் இயல்பாகவே பகைமை கொண்டுதானிருக்கும் என்ற அடிப்படையின் மீதே இந்த நியாயம் தோன்றியிருக்கிறது. நாட்டினுள் நிலவிய மக்கள் வாழ்க்

கையைப் பார்த்தால் இந்த நியாயம் சரி என்று கூடத் தோன்றலாம். ஆனால் இதையே அரசியல் தத்துவமாகக் கூறிவிட்ட பிறகு, கொடுங்கோலனுக்கு முழு உரிமையும் கிடைக்கிறது. பாதுகாப்பு அழிந்துபோய்க் கொடுமையும், ஆபத்தும் நிலைத்து விடுகின்றன. இருந்தபோதிலும், இந்த விஜிகீஷு நியாயத்தால் நன்மை விளையாமலில்லை. புஜபல முடைய மன்னர்கள் தங்கள் செங்கோலை இயன்றவரை விரித்துப் பிறநாடுகளைத் தங்கள் குடைக்கீழ்க் கொண்டு வந்து சக்கரவர்த்தி என்ற லட்சியத் தன்மையை கைக் கொள்ள முடிந்தது. இந்தியாவெங்கும் ஏகசக்ராதிபத்தி யம் செலுத்தவும் அற்ப சமஸ்தானங்களாக மட்டுமிராமல் நாடுகளைப் பேரரசுகளாக்கி மக்கள் வாழ்க்கைக்கு வேண் டிய பெருநன்மைகளை விரிந்த முறையிலே செய்வதும் இத னாலேதான் சாத்தியமாயிற்று.

இனித் தென் இந்திய சரித்திரத்தைப்பார்க்கலாம். பாதாமியி லிருந்த சாளுக்கியரும், காஞ்சியிலிருந்த சிம்மவிஷ்ணு வமி சத்துப்பல்லவரும் மதுரைப் பாண்டியரும் ஆறும் நூற்றாண் டின் பிற்பகுதி தொடங்கிப் பிரபலமடைகிறார்கள். இந்தக் காலத்தில் தமிழ்நாட்டு அரசியலில் சோழரைப்பற்றிய பிரஸ் தாபமேஇல்லை.ஆனால் பிற்காலத்தில் தெலுங்குச் சோழநாடு என்று சிறப்பாக விளங்கவிருக்கும் நாட்டில் இவர்கள் இரு ந்ததாக யுவான்சுவாங் குறிப்பிடுகிறார்.கடம்ப அரசு வீழ்ச்சி யடைந்தபின் மேலோங்கிவந்த சாளுக்கியர் பாணரையும், கங்கரையும்,நளரையும்,கொங்கணத்து மௌரியரையும், தக் காணத்திலுள்ளவேறுபல அரசர்களையும்ஒடுக்கி மேல்கடற் கரையில் பெரும்பாகத்தைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வந்து மேலைநாட்டு வியாபாரத்தில் பங்கு பெற்றார்கள். கி.பி. 642இல் இறந்த இரண்டாம்புலிகேசியே இந்த வம்சத் தில் வந்த பேரரசன். இவனே ஹர்ஷ வர்த்தனன் தெற்கே வரமுடியாதபடி தடுத்து நிறுத்தியவன். தக்காணம் முழு

வதையும் தன் குடைக்கீழ் கொண்டு வந்தவன். பாரசீகத்தில் ஆண்ட இரண்டாம் குஸ்ருவோடு நட்புப் பூண்டிருந்தவன். கீழ்த்தக்காணத்தில் இவன் தனக்குப் பிரதிநிதியாக ஆளும்படி தன் தம்பி குப்ஜ விஷ்ணுவர்த்தனனை நியமித்தான். இந்த அரசு பிற்பட்டு வேங்கிநாட்டு கீழைச்சளுக்கிய வம்சமாகப் பிரிந்து விட்டது. இவன் பல்லவரோடு பெரும் போர் புரிந்தான். இந்தப் போரில் இவன் உயிர் இழந்ததோடு, இவன் தலைநகரமும் அழிந்தொழிந்தது. இப்போர், புலிகேசி தன் வாழ்நாள் முழுதும் அருமையாகத் திரட்டிய சாளுக்கிய சாம்ராஜ்யத்தின் அழிவாக முடிந்தது. இவன் புதல்வர்களில் ஒருவனான முதலாம் விக்கிரமாதித்தனுடைய ஒப்பற்ற திறமையும் ராஜ தந்திரமுமே, இந்தச் சாளுக்கிய வமிசம் முற்றிலும் அழிந்து விடாதபடி செய்து பின்னும் ஒரு நூற்றாண்டு நிலைத்து நிற்க உதவின. பல்லவரோடு இருந்த பகைமை தொடர்ந்து வந்தது. பாதாமி நகர அழிவுக்குப் பதில் பழி வாங்கியுமாயிற்று. தெற்கு எல்லையில் பல்லவர்கள் பாண்டியர்களோடு சதா போர் புரிய வேண்டியிருந்தது. மற்றோர் இடத்தில் கங்கர்கள் செய்த மாதிரி, இந்தப் போரில் ஈழ நாட்டார் ஒரு சமயம் பல்லவரையும் மறு சமயம் பாண்டியரையும் ஆதரித்து வந்தார்கள். விக்கிரமாதித்தியன் நிறுவிய சளுக்கிய கிளைவம்சங்களுள் லாட வம்சம் ஒன்று. இதைச் சேர்ந்தவனொருவன் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அராபியர் தக்காணத்தின் மீது படையெடுத்து வந்தபோது அவர்களை முறியடித்துத் துரத்திய பெருமையுடையவன்.

இந்த அரசர்கள் நிகழ்த்திய போர்களைக் காட்டிலும் சமயத்திலும், இலக்கியத்திலும், கலையிலும் இவர்களால் ஏற்பட்ட வளர்ச்சி முக்கியமானது. சம்ஸ்கிருதத்திற்கு எங்கும் கௌரவமிருந்தது. துர்விநீதன் என்ற கங்க மன்னன் சம்ஸ்கிருதத்திலும், கன்னட மொழியிலும்

நூல்கள் செய்திருக்கிருன். முதலாம் மகேந்திர வர்ம பல்லவன் தன்னை விசித்திர சித்தன் என்று குறிப்பிடுவான். தானே கவிஞனுகவும், சிற்பியாகவும், இசை வாணனுகவும், ஓவியனுகவும் அவன் விளங்கினுன். தமிழ் நாட்டில் ஜைனமும் பௌத்தமும் வளர்ந்து வருவதைக் கண்டு அவற்றிற்குப் பலமான எதிர்ப்பு உண்டாயிற்று. இது சைவ வைஷ்ணவ பக்தர்களிடையில் ஒரு பக்தி மார்க்கமாக வளர்ந்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் இந்தப் பக்தி மார்க்கத்தை வளர்த்தார்கள். இதன் பொருட்டு அவர்கள் நாடெங்கும் சுற்றியபோது, ஆங்காங்கு வழிபட்ட கோயில்கள் சம்பந்தமாக அருமையான அருட் பாடல்களைப் பாடினுர்கள். இப்பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் ஒப்பற்ற மாணிக்கங்களாக விளங்குகின்றன. குமாரிலபட்டரும், சங்கரரும் இக்காலத்தில் வாழ்ந்து தங்கள் சமயத்தைப் போதித்து வந்தார்கள். குகைக் கோயில்களும் பிற கற் கோயில்களும் அவற்றில் காணும் சிற்ப வேலைகளும் தென் நாட்டில் இந்தக் கலைகள் அடைந்திருந்த உச்ச நிலையை விளக்குகின்றன. இந்தக் கலையைப் புலப்படுத்தும் முக்கியமான இடங்களாக பாதாமி, பட்டதகல், எல்லோரா, மகாபலிபுரம், காஞ்சீபுரம் ஆகிய இடங்களைக் குறிப்பிடலாம்.

மேலைத் தக்காணத்தில் எட்டாம் நூற்றுண்டில் சாளுக்கியருக்குப் பதிலாக, ராஷ்ட்ரகூடர்கள் ஆதிக்கம் பெறுகிருர்கள். ஆயினும் பத்தாம் நூற்றுண்டின் இறுதியில், இரண்டாம் தைலன் அவனுக்குப் பின் வந்தோர் ஆகிய மன்னர் காலத்தில் சளுக்கியர் மீண்டும் தலையெடுக்கிருர்கள். ஏறக்குறைய கி. பி. 1200 வரையில் இவர்கள் அரசு விளங்குகிறது. தற்காலத்தைய ஹைதராபாத் சம்ஸ்தானத்தின் மேற்கு எல்லையில் உள்ள மான்யகேடா, கல்யாணி என்ற இடங்கள் அவர்கள் அரசின் தலைநகரங்க

ளாகும். கீழ்த் திசையில் வேங்கி நாட்டுச் சளுக்கியருக்கும் ராஷ்ட்ரகூடர்களுக்கும் பரம்பரையான பகைமை இருந்து வந்தது. பிற்பட்டு இந்தச் சாளுக்கியர்களுக் கிடையில் அரசுரிமை யாருக்குச் சேர்வது என்ற விவாதங்கள் ஏற்பட்டு, ஒரு பாரார் அப்போதுதான் தமிழ் நாட்டில் தலையெடுத்து வருகின்ற சோழர் உதவியை நாடுகிறார்கள். இந்தத் தமிழ்ச் சம்பந்தமானது காலம் செல்லவும் தொடர்ந்து நடைபெறும் கல்யாணங்கள் மூலமாகவும் அதிக வலிவு பெறுகின்றது. இதன் பயனாய்க் கல்யாணி சாளுக்கியரோடு போர் புரியும் போது வேங்கியானது சோழர் பக்கத்திலே நிற்கிறது. முடிவில் தமிழ்ச் சோழ அரசு ஆண் சந்ததி அற்றுப் போய் வேங்கி மன்னன் கி. பி. 1070-இல் சோழ அரசை ஏற்கும்போது, வேங்கி நாடு சோழ நாட்டோடு ஒன்றாகி விடுகிறது. இந்தக் காலம் கன்னட தெலுங்கு இலக்கியங் களும் சளுக்கிய சிற்ப முறைகளும் ஓங்கி நின்ற காலமாகும். எல்லோராவில் உள்ள கயிலாசநாதர் கோயில் இந்தக் காலத்தில் தோன்றிய கோயில்களுள் ஒன்று. ராஷ்ட்ரகூடர்களின் கலைக்கு அரிய சின்னமாக விளங்குகிறது.

சோழ ஏகாதிபத்தியம் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது. வடக்கிலிருந்த பல்லவர்களை விரைவிலே ஒடுக்கிவிட்டுப் பாண்டியரையும், சேரரையும் வென்று சோழர் இலங்கைமீதும் படை யெடுத்தார்கள். ஆனால் சோழ சாம்ராஜ்யம் தொடங்கும்போது சுமார் 950-இல் ராஷ்ட்ர கூடர்களால் முக்கியமாக மூன்றாம் கிருஷ்ணனால் சோழ நாடு குலையும்போலிருந்தது. ஆயினும், அக்கருநாடக அரசு தன் தலைநகரினின்றும் நெடுந்தூரம் வந்து விட்டபடியால் நிலைத்த பயன் எதுவும் விளைவிக்க முடியவில்லை. புதிதாய் நிறுவப்பெற்ற சோழ அரசு 11-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் முதலாம் ராஜராஜன் காலத்திலும் அவனிலும் புகழ்பெற்ற அவனுடைய மகன் முதலாம்

ராஜேந்திரன் காலத்திலும் உச்சநிலை யடைந்தது. தந்தையும், மகனும் முதன்முதலாகத் தென் இந்தியா முழுவதிலும் அரசியல் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டினார்கள். இந்துமகா சமுத்திரமெங்கும் கப்பல் செலுத்திச் சோழ அரசைப் பிறர் மதிக்கத் தக்க கடற்படையுடைய அரசாகச் செய்தார்கள். படையெடுத்ததனுலும், ராஜ தந்திரத்தினுலும், ஸ்ரீவிஜய ராஜ்ய முழுவதும் ஆதிக்கம் செலுத்தினார்கள். நாட்டின் நிர்வாக முறையை ஒழுங்குபடுத்தி மேல்விசாரணை முழுவதும் மத்திய அதிகாரி கையில் இருக்கும்படி செய்தார்கள். அதற்கு முன்பு எப்போதுமே இல்லாத முறையில் கிராம சபைகளுக்குச் சுயாட்சியை வழங்கினார்கள் தந்தையான ராஜராஜன் தென்னிந்தியக் கட்டிடச் சிற்பத்தில் ஒப்பற்ற மாணிக்கம் என்று சொல்லத்தக்க தஞ்சைப் பெருங் கோயிலைக் கட்டினான். மகனாகிய இராஜேந்திரன் அதைப்போன்ற மற்றொரு கோயிலைத் திருச்சி ஜில்லாவிலுள்ள காடாரம்பத்தில் கட்டி அதைச் சுற்றிலும் ஒரு புது நகரத்தையே நிர்மாணித்தான். கங்கைகொண்ட சோழபுரம் என்பது இந்த நகரத்தின் பெயர். தென் இந்தியாவிலே சோழ அரசு மேலோங்கி நிற்பதை இந்தியநாடு முழுவதற்கும் அறிவுறுத்துவதற்காக ராஜேந்திர சோழன் கங்கைக் கரைக்குச் சென்று வந்த திக்கு விஜய யாத்திரையை நினைவு கூர்வதற்காகவே இந்த நகரைக் கட்டினான். சோழரைப்பற்றிப் பொதுவாய்ச் சொல்வதானால் அவர்கள் கிராமந்தோறும் ஒரு கற்கோயிலாவது கட்டினார்களென்றும், பல கல்விச் சாலைகளையும், அவற்றின் ஆசிரியர்களுக்குரிய சம்பளத்துக்காகவும், மாணவர்கள் சாப்பாடு முதலியவற்றுக்காகவும் நிலையான மான்யங்களையும், பொதுஜன உபயோகத்துக்காக வைத்தியசாலைகளையும், பாசன ஏரிகளையும் பிறவற்றையும் ஏற்படுத்தினார்கள் என்றும் சொல்வது சிறிதும் மிகையல்ல. தமிழ் இலக்கியத்திலும் மிக உன்னதமான

காலம் சோழர் காலம். தமிழ் இராமாயணம் பாடிய கம்பன் முதலான பெருங் கவிஞர்கள் சோழ மன்னராலும், அவர்கள் கீழுள்ள சிற்றரசர்களாலும் ஆதரிக்கப்பெற்று வந்தார்கள்.

வட இந்தியாவிலே ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் ஹர்ஷன் இறந்துபோன போது நாடு சீர் குலைந்தது. சிறிது காலத்துக்கு வடகிழக்கில் திபெத்து தலையிடும்படியும் நேர்ந்தது. இதன் மூலமாகவே பௌத்த சமயம் அங்கிருந்து திபேத்து செல்ல உதவிற்று என்று எண்ணலாம். மத்திய ஆசிய அரசியலிலே காஷ்மீரம் சம்பந்தப்பட்டு சீனத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டது. இந்தியாவிலும் தன் ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொண்டது. சீன சக்ரவர்த்தியால் அப்போதைய காஷ்மீர மன்னர்கள் முடி சூட்டப் பெற்றார்கள்; மற்றப்படி யாவும் கனிஷ்க மன்னன் காலத்திலிருந்த சிறப்புக்களை ஒத்திருந்தன. இந்த நிலைமை நீடித்திருக்கவில்லை. சீக்கிரத்தில் இந்திய எல்லைப்புறத்தில் உள்ள ஒரு சிறு நாடு என்ற அளவில் காஷ்மீரமும் குறைந்துவிட்டது. சிந்து நாடும் அதை யொட்டிய பிரதேசமும் 712-ஆம் ஆண்டிலிருந்து அராபியர் வசமாயின. முதலிலே இவை பக்தாத் நகரத்துக் கலிபாவுக்குச் சொந்தமான மாகாணமாயிருந்தன. விரைவில் தனிப்பட்ட இரு நாடுகளாகப் பிரிந்து பெயரளவில் மட்டும் அந்தக் கலிபாவுக்குக் கீழ்ப்பட்டிருந்தன. ஆனால் இந்த நிலையினால் எந்தப் பயனும் விளைந்துவிடவில்லை. இந்தியாவிலே மேலும் படையெடுத்துச் செல்ல அராபியர் முயன்றபோது மேலே நாம் பார்த்தபடி அவர்கள் முறியடிக்கப் பட்டார்கள். பிறகு பல ராஜபுத்திரர்கள் அந்நாட்டைப் பங்கு போட்டுக் கொண்டார்கள். இவர்களுடைய போர்களைச் சரித்திரத்தில் காணலாம். கன்னோஜியிலிருந்த கூர்ஜரர்களும், மாளவத்திலிருந்த பரமரர்

களும் அடுத்தாற்போல் முக்கியமானவர்கள். தெற்கிலிருந்த ராஷ்ட்ரகூடர்களும் சாளுக்கியர்களும் வடஇந்திய விஷயங்களிலும் தலையிட்டார்கள். காகத்வால், சண்டெல்லர், சௌகணர் என்பவர்கள் சிறிது காலம் கழித்துத் தலையெடுத்தார்கள். முகம்மதியர் நாட்டை ஆக்கிரமித்த காலத்தில் இவர்களே எங்கும் இருந்திருக்கிறார்கள். அக்காலத்தில் நடைபெற்ற போர்களினால் எவ்விதத் தீங்கும் இல்லாமல் கலையும் சிற்பக் கலையும் வளர்ந்து வந்தனவாகத் தெரிகிறது. மார்த்தாண்டன் கோயிலும், காஜுரஹோவிலுள்ள கோயில்களும் அக்காலத்திய சிற்பக் கலையின் சிறந்த சின்னங்களாகும். சிற்பத்திலும், ஓவியத்திலும், எளிமையாக இயற்கையைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற பழைய சம்பிரதாயம் மறைந்து புதிய சம்பிரதாயம் தோன்றுகிறது. தத்துவக் கருத்துக்களுக்குப் புறத்தோற்றம் தரவேண்டும் என்ற எண்ணம் உண்டாகியிருக்கிறது. கலையுலகத்திலே தத்துவ விளக்கம் என்ற இத்தகைய புதிய மாறுபாட்டை இக்காலத்து ஆராய்ச்சியாளர்கள் எல்லோரும் ஒருமுகமாக ஒப்புக் கொள்வதில்லை.

இந்திய எல்லையில் உள்ள மற்றொரு முக்கியநாடு நேபாளம். இந்துக் கருத்துக்களை ஏற்று அவற்றை வெளியுலகத்தில் பரவச் செய்வதில் இந்நாடு பெரும் பங்கு கொண்டது.

எட்டாம் நூற்றாண்டின் கடைசியில் பாலவம்சம் தலையெடுத்தது முதல், வங்காளமும், பீஹாரும் தனித்து நின்று விடுகின்றன. பாலக்கலை புகழ்பெற்றது. தந்திர நூல்களின் சாயல் அதில் அதிகம். அக்காலத்தின் சிறப்பியல்பான புத்த சமயத்தில் தோன்றிய புதிய அபிவிருத்திகளுடனும், நாலந்தாவிலிருந்த பெரிய மடத்துடனும் பாலர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். ஸ்ரீவிஜய நாட்டிலிருந்த சைலேந்திரர்களோடு அவர்கள் கடல் கடந்

தும் சம்பந்தம் வைத்திருந்தார்கள் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன.

நாம் இப்போது விக்கிரம சகாப்தத்தின் முதல் ஆயிரம் ஆண்டுகளின் முடிவிற்கு வந்திருக்கிறோம். நம்முடைய நாக ரிகத்தில் சில அம்சங்களைப்பற்றி முன்னே குறிப்பிடமுடிய வில்லை. அவற்றை இந்த ஆராய்ச்சியிலிருந்து விட்டுவிட வும் முடியாது. அவற்றை இங்கே சிறிது கவனித்தல் நலம். முன்னமே சொல்லியதுபோல இந்திய அரசியலில் சாதா ரணமாய் வழங்கியமுறை, பரம்பரையாகவந்த முடிமன்னர் ஆட்சியாகும். வாரிசு பாத்தியதையைக் குறித்த கலகங்கள் இல்லை யென்று சொல்லமுடியாது. ஆயினும், அரசன் உயிரோடு இருக்கும் காலத்திலேயே இளவரசுப் பட்டம் ஒன்றைக் கட்டிவைத்து விடுவது வழக்கமாயிருந்தபடி யால், கலகங்கள் பெரும்பான்மையும் குறைந்து போயின. அவ்வப்போது இருந்த நிலைமைகளை ஒட்டியே அரசுரிமை யும் கொள்ளப்பட்டு வந்தது. அரசாள்வதற்கேற்ற ஆற் றலும், திறமையும், படைப்பெருக்கமும் உடையவன் எவனு யிருப்பினும் அவன் அரசாளலாம் என்பது பொதுவான க்ஷத்ரவிதி. தர்மத்தையும் நீதியையும் குறித்து வழங்கிய கருத்துக்கள் அரசனுக்கும் பொருந்தும். ஆயினும் அவன் யதேச்சாதிகாரம் செலுத்த எண்ணினால், அவனை எதுவும் தடை செய்ய முடியாது. மந்திரிகள் இருந்து மந்திரா லோசனை நடத்தியது உண்மை. மந்திரி சபையிலே சொல்லப்பட்ட ஒவ்வொரு அபிப்பிராயத்தையும் அரசன் கேட்டுப் புரோகிதருடைய கருத்தையும் அறிந்து முடிவில் தன் அபிப்பிராயப்படியே நடந்து கொள்ளலாம் என் பதே நம்முடைய அரசியல் கொள்கை என்று தெரி கிறது. தற்கால அரசியல் அமைப்புக்களை ஆராய்ந்ததனால் தோன்றிய கருத்துக்களை யெல்லாம் நமது பண்டைய அரசியலில் காண முயல்வது பயனற்ற வேலை.

இதனுல் தவறும் விளையும். யதேச்சாதிகாரம் செலுத்து வதைத் தடுக்கத் தற்கால அரச முறையில் என்னென்ன தடைகள் இருக்கின்றனவோ, இவ்வளவும் பண்டைய அரச முறையிலும் இருந்தன; நடைமுறையில் அன்று இவை இன்னும் அதிக வலிவு பெற்றுங்கூட இருந்தன. ஆனல் இவை முற்றிலும் வேறு வகை. முதலாவது அரச குமாரனுடைய கல்விப் பயிற்சி. இலக்கியமும், சிற்பமும், தத்துவசாஸ்திரமும், நியாய சாஸ்திரமும் அவன் கற்க வேண்டியிருந்தது. இந்தக் கல்வி காரணமாகவும், அவன் வளர்ந்துவந்த சமூகநிலை காரணமாகவும், யதேச்சாதி காரம் செய்து தன் குடிகள்மீது கொடுங்கோல் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு ஒரு சிறிதும் உண்டாக இடமில்லை. தவிரவும், அரசாங்க நட வடிக்கைகள் சுருங்கிய எல்லைக்குள் தான் நடந்து வந்தன. நம்முன்னோர்கள் எதற்குமே அரசனை எதிர்பார்த்ததில்லை. ஆனல் அவனே, பல விஷயங்களில் மக்களை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. சமூக பரிபாலனம் செய்து துஷ்ட நிக்கிரகம் செய்வதே அரசனுடைய கடமை. சமுதாய நிலை எப்படியிருக்கவேண்டும், என்னென்ன மாறுதல்களைச் சமு தாயத்தில் ஏற்படுத்த வேண்டும், அவற்றை யார் எப்படிச் செய்யவேண்டும் என்பன போன்ற கேள்விகளில் அரச னுக்குப் பங்கு கிடையாது. மக்கள் யாரும், தனித்த ஒரு மனிதன் என்ற முறையிலே, எதுவும் செய்ய இடமில்லை, மனமுமில்லை. அவர்கள் எண்ணமெல்லாம் ஒரு தொகுதி யின் செயலாகவே வெளிப்பட்டது. உதாரணமாக, சாதி, தொழில், தொழிற் சங்கம், கோயில் பஞ்சாயத்து, கிராம சபை என்ற தொகுதிகளைப் பார்க்கலாம், இந்த ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்த கட்டுப்பாடு களும், சம்பிரதாயங்களும் உண்டு. இக்கட்டுப்பாடு களுக்கு அரசாக்ஞையைப் போன்ற வலிவும் உண்டு. இவை தங்கள் சம்பந்தப்பட்ட வரையில் பூர்ண அதிகாரம்

பெற்றவை. ஆனல், அரசாங்கத்தில் இவற்றிற்கு இன்ன இன்ன அதிகாரங்கள் உண்டு என்று எவ்விதமான ஆதரவோ வரையறையோ இல்லை யென்பது உண்மை. இவை தங்களுடைய அமைப்பைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும். விவாதம் நேரிடும்பட்சத்தில் இந்த முறையில் தான் அதைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நியதியும் உண்டு. சாட்சியம் ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் அரசனும் பிற நீதிபதிகளும் இன்ன இன்ன முறையில் தான் நடந்துகொள்ள வேண்டும் என்ற விரிவான திட்டமும் இருந்தது. ஒவ்வொரு தனித்தொகுதியும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அதிருப்தி ஏற்படாத முறையில் நடந்து கொண்டு மற்றத்தொகுதிகளோடு தீராதபூசலிட்டுக்கொள்ளாத வரையில், அதாவது யாரும் அரசனிடத்திலாவது அரசாங்கத்தினிடமாவது குறை சொல்லி முறையிட்டு விசாரணை செய்யவேண்டுமென்று பிரார்த்திக்காத வரையில், அரசன் தன் நாட்டில் எந்த நகரத்தில் அல்லது கிராமத்தில் எந்தத் தொகுதிகள் எப்படி யெப்படி வேலை செய்தன என்பதைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்பட்டதில்லை. அரசன் வசூலிக்கக்கூடிய வரிகளும், சம்பிரதாயமாக இவ்வளவென்று வகுக்கப்பட்டிருந்தன. வெளிப்படையான உடன்படிக்கை மூலமாகத்தான் இவற்றை மாற்றலாம். வரி வசூலிப்பது அரசனுக்கே உரிய தனி உரிமையல்ல. குறித்த காரியங்களுக்காக ஒவ்வொரு தொகுதியும் அல்லது சபையும் வரி வசூலிக்க அதிகாரமுடையது. யாரேனும் வரி செலுத்த மறுத்தால், அப்போது அந்தச் சபை வரி வசூலிப்பதில் அரசன் துணையை நாடும். ஆனல் இப்படி நேர்ந்த சந்தர்ப்பங்கள் குறைவு. அக்காலத்தில் ஓட்டுரிமை வழங்கிய போதிலும், அடிக்கடி ஓட்டெடுப்பது வழக்கமில்லை யென்று தெரிகிறது. விவாதமுண்டான விஷயத்தை எல்லோரும் கூடி ஆலோசித்து ஏகமனதாக ஒரு முடிவுக்கு வருகிற வரையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்வ

தில்லை. ஏகமனதான முடிவு ஏற்பட்ட பின், முன்னமே மறுத்தவர்கள் கூட, வீண் மனஸ்தாபம் வேண்டாம் என்ப தற்காகவாவது கட்டுப்பாட்டுக்கு இணங்கிவிடுவார்கள்.

இதனுல், அரசன் அவ்வளவு பிரதானமல்ல என்ருவது, அரசாங்கத்தில் அவனுக்குக் கௌரவம் இல்லை என்ருவது அர்த்தமில்லை. அராஜகத்தினுல் விளையும் கொடுமைகளைப் பற்றி நம்முடைய இதிகாசங்களும் சட்ட புத்தகங்களும் கூறும் விவரங்களை உலகத்தில் வேறு எந்த நாட்டு இலக்கி யத்திலுமே காணமுடியாது. முடிமன்னன் ஆட்சியில் உள்ள பலமெல்லாம், அவன் பரிபாலித்து வரும் சமூக மானது அவன் உண்டாக்கியதல்ல, நெடுங்காலமாய் இருந்து வருவது, இதை நிலைநிறுத்தவே அவன் பாடுபடு கிருன் என்பதாகும். கடவுள் விதித்த கடமை யென்று இதை அவன் செய்யும்போது, பிறரையும் அப்படிச்செய்யப் பண்ணுவது அவனுக்குச் சாத்தியமாகிறது. சாதாரண மான யாருக்கும் இதைவிடச் சிறந்த கௌரவமும், சிறந்த நோக்கமும் இருக்கமுடியாது. இதுமட்டுமல்ல. அரசன் என்ற காரணத்தினுலேயே நாட்டில் தனி மக்களுக்கோ, சபைகளுக்கோ சொந்தமாயிராத பொருள்கள் யாவும் அரசனுக்கே உரியன. கௌரவத்துக்கும் நேர்மைக்கும் அவனே பிறப்பிடம். சாதாரணமாய் அரசாங்கத்தில் கிடைக்கும் அரசிறை மூலமாக அவன் ஏராளமான செல் வத்தைப் பெற்று அதை வினியோகம் செய்தான். கலைகளை யும், கவிதையையும் ஆதரிக்கும் வள்ளலும் அவனே. நல்ல காரியங்களை ஆதரிப்பவனும், சிஷ்டபரிபாலனம் செய்பவ னும் அவனே. அரசனுக்குச் செய்யாத கௌரவம் கிடை யாது. கோயிலில் உள்ள தெய்வங்களுக்கு வழிபாடு செய் யும்போது ராஜோபசாரம் செய்வதாக நம்முன்னேர் சொல் வார்கள். இதைப் பார்த்தால் அரசனுக்கு எவ்வளவு மேலான உபசாரம் செய்தார்கள் என்பது விளங்கும்.

மேலே குறிப்பிட்ட காலத்தின் தொடக்கத்தில் தான் மனுஸ்மிருதி, யாக்ஞவல்கிய ஸ்மிருதி ஆகிய இவற்றில் தற்போது வழங்கும் பாடங்கள் ஏற்பட்டன. இவை எப்படியாயினும், காமந்தகருடைய நீதிசாரமும், யாக்ஞவல்கியருக்கு விசுவரூபர், அபரார்க்கர், விக்ஞானேசுவரர் ஆகிய மூவரும் எழுதிய வியாக்கியானங்களும், மனுபாஷ்யமும் இக்காலத்திலேதான் தோன்றின. சோமதேவ சூரி எழுதிய நீதிவாக்கியாமிர்தமும், சாளுக்கிய சக்கரவர்த்தியாகிய சர்வக்ஞ சோமேசுவரன் எழுதிய அபிலாஷிதார்த்த சிந்தாமணி அல்லது மானசோல்லாசமும் அப்படியே. ஆகவே அக்கால முழுதும் சிறந்த நீதிமான்கள் பலவகையாலும் அரசியல் கோட்பாட்டையும் சட்ட திட்டங்களையும் ஆராய்ந்து வந்தார்கள் என்பதற்கு இவை சான்று பகர்கின்றன.

இந்திய சரித்திரத்தில் எங்கும் காண்பது போலவே இந்தக் காலத்திலும், போர்என்பது கூடவே பிறந்திருக்கிறது. முன்னமே சொல்லியுள்ள காரணங்களினுல் தேசத்தில் எங்காவது சண்டை எப்போதும் நடந்துகொண்டேயிருந்தது. இந்தச் சண்டைகளை யெல்லாம் தாங்கள் ஒழித்துவிட்டார்கள் என்ற காரணத்தையே பிரிட்டிஷார் இந்தியாவைத் தாங்களே இன்னும் ஆண்டு வரவேண்டும் என்பதற்குள்ள முக்கிய காரணமாகச் சொல்லுகிருர்கள். மேலே குறிப்பிட்ட காலத்தில் எத்தனையோ சந்தர்ப்பங்களில் போரினுல் விளைந்த கொடுமைகள் சொல்லமுடியாதபடி பெருகி யிருந்தன. கொடுமையில்லாவிட்டால்தான் அதிசயம். ஆயினும் இந்தியப் போர்களிலே பொதுவாகப் பார்த்தால், போர் என்பது அதில் ஈடுபட்ட வீரர்களுக்கு மட்டுமே உரிய ஒரு தொழிலாகவே இருந்திருக்கிறது. அவர்களுடைய தர்மம், போரில் நின்று சண்டையிட்டு வெல்ல வேண்டும் அல்லது மடிய வேண்டுமே ஒழிய புறங்காட்டி ஓடுவதல்ல.

வெற்றியினுல் கிடைக்கும் பரிசில் புகழ். போர்க்களத் திலே இறந்தால் கிடைப்பது வீர சுவர்க்கம். புறங்காட்டு வது நீக்க முடியாத பாவம், பொன்ருத பழி. எனவே, போர் என்பது போர்வீரனுக்குரிய சுதர்மமாகிறது. சமுதா யத்தில் மற்ற வகுப்பினருக்கு இதில் எவ்விதத் தொடர்பு மில்லை. இதனுல் அவர்களுக்கு எவ்விதத் துன்பமுமில்லை. இதை உணர்ந்தால், போர்க்களத்தின் அருகாமையிலேயே உழவர்கள் அறுவடை செய்துகொண்டிருந்தார்கள் என்று மெகாஸ்தெனிஸ் கூறுவதிலுள்ள உண்மை புலப்படும். அபிதர்மகோச வியாக்கியா என்ற பௌத்த நூலில் உள்ள பின்வரும் பகுதியும் அவர் கூற்றையே வலியுறுத்துகிறது: "தத்துவக்கோட்பாடுகள் தங்களை எதிர்ப்போருடைய கருத் துக்களை அழிக்கின்றன. ஆயினும், அவை தர்க்கமுறைகளை யொட்டி யிருக்கவேண்டும். இம்முறைகள் அக்கோட்பாடு களுக்கே பயனுள்ளன. எப்படி யென்ருல், அரசர்கள் பகைவனுடைய போர் வீரர்களை அழித்தபோதிலும்கூட, இருபக்கத்துப் படைக்கும் உதவி செய்கிற உழவனுக்கு இடுக்கண் செய்வதில்லை."

சமூக வாழ்வு முழுவதும் ஒற்றுமையும் பரஸ்பர உதவியும் பரவி யிருந்தமையால், வாழ்வு அமைதியாயும் இன்பமாயும் இருந்தது. கல்யாணம் சாப்பாடு முதலிய விஷயங்களில் அதிகக் கட்டுப்பாடுகளைச் சாதி முறைமை இன்னும் ஏற் படுத்த ஆரம்பிக்கவில்லை. எண்ணற்ற பிராம்மணர்கள் கடல் கடந்து வெகு தொலைவில் உள்ள நாடுகளுக்குச் சென்று வேதத்தில் கூறப்பட்ட யாகங்களை அங்கெல்லாம் பரப்பினர்கள். பிற்காலத்தில் இவ்வாறு செய்வது அவர் களுக்கு முடிந்திருக்காது. ஆர். பி. மசானி என்பவர் சாதி முறைமையை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப் பெற் றுள்ள ஹிந்து சமுதாயத்தைக் குறித்து 'இந்தியா சுந்த தனம்' என்ற புத்தகத்தில் பின் வருமாறு எழுதியிருக்

கிறார்; இது விக்கிரம சகாப்தத்தின் முதலாயிரம் ஆண்டுகளுக்கு முற்றிலும் பொருந்தும்: "ஹிந்து சமயக் கோட்பாட்டின்படி எல்லா நூல்களின் முடிவும் என்னவென்றால், கடவுள் படைப்பில் உள்ளன யாவும் ஒன்றே என்பதை உணர்வதே யாகும். சாதி முறைமையை அடிப்படையாகக் கொண்ட சமுதாய அமைப்பானது இந்த ஒருமைப்பாட்டை அங்கீகரித்திருக்கிறது. ஆயினும் மக்கள் வாழ்க்கையில் பலர் பலவேறு வகையினர் என்றும், வாழ்க்கைக்கு உரிய தேவைகளும் முறைகளும் பலவகையின என்றும் அது உணர்ந்திருக்கிறது. மனிதனுக்கும், மனிதனுக்கு மிடையில் உள்ள வேறுபாட்டையும், ஏற்றத் தாழ்வையும் அது எண்ணியபோதிலும், இவற்றைச் சரிப்படுத்த முடியாதென்றோ குறைக்க முடியாதென்றோ அது கருதவில்லை. இதுவே அதிலுள்ள முக்கிய சிறப்பாகும். உலகத்தைப் படைத்த பிரமனின் நான்கு வெவ்வேறு அங்கங்களிலிருந்து நான்கு சாதிகளும் தோன்றின என்ற கருத்தைக்கொண்டு, இச்சாதிகளில் ஒன்றைவிட ஒன்று உயர்வானது என்று சொல்வதற்குக் கடவுள் சம்மதமுண்டு என்று கூறியபோதிலும்கூட, இதன் உட்கருத்து யாவற்றையும் ஒருமைப்படுத்தவேண்டும் என்பதே யல்லாமல், பிரித்து வைக்க வேண்டும் என்பதல்ல. சாதி முதலிய பகுதிகள் ஒவ்வொன்றும் முழுச் சமூகத்தின் பகுதியேயாகும். எனவே, ஒவ்வொருவனும் தனக்குரிய கடமையைச் செய்வதோடுகூட சமுதாயத்திற்கும் தன் கடமையைச் செய்ய வேண்டியவனாகிறான். இல்லை என்பவருக்கு இடமில்லை. ஆனால் ஒவ்வொருவனும் தன்னால் முடிந்த வரையில் சமுதாயத்தின் நன்மைக்காகத் தன்னுடைய திறமைக்கும் தொழிலுக்கும் ஏற்றபடி உழைக்க வேண்டியவனாகிறான். இப்படி எண்ணிய மன நிலையே எல்லாச் சாதிகளையும் அவற்றின் கொள்கைகள், தொழில்கள், செயல்களையும் பொதுவான ஒரே அமைப்பிற்குள் அடக்கிற்று. ஒவ்

வொருவனுக்கும் உரிய தனியிடம் உண்டு. பொதுவான சம்பிரதாயம், பொதுவான கொள்கை, பொதுவான நீதி முறை ஆகியவற்றில் ஒவ்வொருவனுக்கும் தனியான பங் குண்டு. அப்படியே, அவனவன் செய்யவேண்டிய தொழி லுக்கேற்ற திறமையும் பரம்பரையாகத் தனிப்படக் கைவந் திருக்கிறது. சமுதாய அமைப்பில் தனித்த பிரிவுகளாக உள்ள சாதிமுறைகளை மேற்சொன்ன அமைப்பானது ஒன்றுபடுத்த உதவியிருக்கிறது. ஒரே தொகுதியில் உள்ள பலருக்கிடையில் ஒற்றுமையை உண்டாக்கிற்று. அதோடு, ஒரு தொகுதியும் மற்றொரு தொகுதியும் நல்ல முறையில் ஒன்றி வாழும்படியும் அது செய்திருக்கிறது. இப்படியாகப் பண்டைய சம்பிரதாயம் நிலைத்துவந்து, சமூகத்தில் அமை திக்குப் பங்கமேற்படாமல், பொதுநல வாழ்வும், பொருள் நிலையும் கெடாமல் பாதுகாக்கப்பெற்று வந்துள்ளன. ஒவ்வொருவரும் இன்பமாகவும், திருப்தியாகவும் வாழ முடிந்தது.''

இவற்றால் நாட்டின் மக்கட் சமுதாயத்தில் ஒருமைப்பாடு ஏற்பட்டதோடுகூட, பாரதவர்ஷம் முழுவதிலும் ஒரே நாக ரிகம் நின்று நிலவுவதற்குப் பலவகையாலும் அனுகூலங்கள் ஏற்பட்டுவந்தன. சம்ஸ்கிருதத்தில் இந்நாட்டுச் சிறந்த அறிஞர்களால் செய்யப்பட்ட நூல்களாகிய சுருதி, ஸ்மிருதி, புராணம் என்பன இத்தகைய ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதற்குத் துணைபுரிந்தன. இவற்றோடு நெருங் கிய தொடர்புடையவை நமது பேரிதிகாசங்களான இராமாயணமும், மகா பாரதமும். கோயில்களில் இவற்றைப் பாடுவதாலும், சிற்பம், ஓவியம், நாடக அரங்கு முதலியவற்றாலும் இவை பரவின. அடிப் படையான சில முக்கிய கொள்கைகள் இவை பரவியது காரணமாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்தக் கொள்கைகள் அந்தந்த இடத்திலுள்ள நிலைமை

களுக்குத் தகுந்தபடி ஓரளவுக்கு மாறியபோதிலும் கூட, அவற்றின் வலிவு ஒன்றும் குறைந்து போய்விடவில்லை. தவிர இந்நாட்டின் கடைக்கோடியில் உள்ள ஸ்தலங்களாகிய ராமேசுவரம், கன்னியாகுமரி, சோமநாதபுரம், துவாரகை, ஹிங்கிலாஜ், ஹரித்துவாரம், பதரிநாத், காமாக்கியா, பூரி, முதலிய இடங்களுக்கு யாத்திரை செய்ய வேண்டுமென்று விதித்தமையினால், இந்த ஒருமைப்பாடு இன்னும் வளர்ந்தது. வெகுதூரத்தில் உள்ள ஓர் ஊரில் திருவிழா நடக்கும் காலத்தில் உற்றார் உறவினரோடு யாத்திரைபோக நேர்ந்ததனால், அறிவு வளர்ச்சிக்கும் இடமிருந்தது. ஆசாரிய புருஷர்களும் பெருங் கல்விமான்களும் நாடு முழுதும் சுற்றி ஆங்காங்கு தங்கள் கொள்கைகளைப் பரப்ப வாதவிவாதங்கள் நடத்தியதனாலும் இதற்கு அனுகூலமேற்பட்டது. வர்த்தகமும் இதற்கு அனுகூலம் செய்தது. வர்த்தகர்கள் ஒரு குழாமாய்ச் சேர்ந்து தங்கள் பண்டங்களைத் திரட்டிக்கொண்டு திருவிழாக் காலங்களில் முக்கிய ஸ்தலங்களை அடைவார்கள். தவிர, பேரரசர்கள் தங்கள் சபையிலும் தலைநகரிலும் பண்டிதர்களும் கலைஞர்களும் நாடெங்குமிருந்து திரண்டு வரவேண்டுமென்று விரும்பினார்கள். இதற்காகக் கவிதைக்கும் கலைக்கும் தாராளமாய்ப் பொருள் வழங்கினார்கள். தென்னாட்டில் கொடையையே தங்கள் நோக்கமாய்க்கொண்டிருந்த சோழ மன்னர்களும், சாளுக்கியரும் எண்ணற்றவர். இந்திய சரித்திரத்திலே நெடுங்காலத்திற்கு முன்னமேயே இந்தியா ஒரே நாடு என்ற ஒருமைப்பாடு உறுதியாகவும் மறுக்கமுடியாதபடியும் உணரப்பெற்றிருக்கிறது. இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சியால் தோன்றியதல்ல இவ்வுணர்ச்சி.

விக்கிரம சகாப்தத்தின் இரண்டாவது ஆயிரம் ஆண்டுகளைக்குறித்து ஆராயத்தொடங்குமுன் ஹிந்து, கணித சாஸ்திரம் இந்தியாவுக்கு வெளியே பரவியதைப் பற்றியும், இந்

தியாவுக்கும் சீனத்துக்கும் இருந்த தொடர்பைப்பற்றியும் சில வார்த்தைகள் சொல்லவேண்டும். 1881-ஆம் ஆண்டில் பக்ஷாலி என்னும் இடத்தில் ஒரு பழைய கணித நூல் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இது கி. பி. மூன்றுவது நான்காவது நூற்றுண்டுகளில் தோன்றி யிருக்குமென்று ஹோயெர்ன்லி என்பவர் கூறுகிறுர். "பின்னங்கள் முதலிய சிக்கலான கணக்குகளையும் வரவு, செலவு, லாப நஷ்டம், வட்டி முதலான கணக்குகளையும் இன்னும் நுட்பமான கணக்குகள் பலவற்றையும் இக்கணித நூல் விவரிக்கிறது. எண்கள் ஒன்பதுக்கும் பூஜ்யத்துக்கும் ஸ்தானத்தை யொட்டிய தனி மதிப்புக் கணிதத்தில் ஏற்பட்டு விட்டது." அராபிய எண்கள் என்று இப்போது வழங்குகிற எண்கள் உண்மையிலேயே இந்தியாவில் தோன்றியன என்பது எல்லோரும் அறிவார்கள். கி. பி. 773ஆம் ஆண்டு பாக்தாத் நகரில் ஆட்சி புரிந்த அல்-மான்சூர் என்ற கலிபாவின் சபையில் இந்தியப்பண்டிதர் ஒருவர் சிந்த்ஹிந்த் (சித்தாந்தம்) என்ற இந்திய வான நூல் ஒன்றைக் கொண்டுவந்தார். அராபியர்கள் இதிலிருந்தே எண்ணைக் கற்றுர்கள் என்று கருதப்படுகிறது. ஆனல் இதற்கும் ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னமே இந்திய எண்கள் இந்தியாவுக்குவெளியே தோன்றிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. யூப்ரடிஸ் நதிக் கரையிலுள்ள கென்னஸ்ரி மடத்தில் மத குருவாயிருந்த செவரஸ் செபோக்ட் என்ற சிரியா நாட்டு ஆசிரியர் இவற்றைக் குறிப்பிடுகிறுர். "தரை நூலையும் வான நூலையும் பற்றி அவர் எழுதினுர். கிரேக்க ஆதாரங்களைக் கொண்டு வான நூலைப்பற்றி எழுதினுர். மற்றோர் இடத்தில் ஹிந்து எண்களாக ஒன்பது எண்களின் உபயோகத்தையும் நன்கு அறிந்து அவற்றைக் குறிப்பிட்டிருக்கிறுர்" என்று சார்ட்டன் அவரைப்பற்றிக் கூறுகின்றுர். செபோக்ட் பின்வருமாறு எழுதுகிறுர்: வான நூலில் ஹிந்துக்கள் எவ்வளவோ

நுட்பங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கிரேக்கர்களும் பாபிலோனியர்களும் கண்டவற்றைவிட இவை பெரிதும் யுக்தி நிறைந்தவை. இவர்கள் கணக்குப் போடும் முறையும் சொல்லவொண்ணாத திறமை பொருந்தியது. ஒன்பது அடையாளங்களைக்கொண்டு இவர்கள் கணக்குப் போடுவதையே நான் குறிப்பிடுகிறேன் என்கிறார். ஒன்பது அடையாளங்களைச் சொன்னதனால், பூஜ்யம் தெரியாது என்று அர்த்தமில்லை. ஏனென்றால், அவர்கள் ஒன்பதிற்கும் பூஜ்யத்திற்கும் பதினாறும் நூற்றாண்டு வரையில் வேறுபாடு கற்பித்தே வந்திருக்கிறார்கள். கோதம சித்தர் என்ற பெயருள்ள சீனத்து ஹிந்து சோதிடர் ஒருவர் டாங் மன்னர் சபையில் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தாரென்றும் சகுனமறியும் தந்திர நூல் முறையைப்பற்றி அவர் நூல் எழுதினார் என்றும் சார்ட்டன் கூறுகிறார். இந்த நூலில் காலத்தைக் குறிப்பிடுவதற்கான பண்டைய முறைகள் பலவற்றை விவரித்ததோடு வடமொழியிலிருந்து தாமே மொழிபெயர்த்த ஹிந்து நூல் முறையையும் குறிப்பிட்டிருக்கிறார். இது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் சீனத்துக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட ஹிந்துக்கணக்கான தசாம்ச பின்னத்தையும் அதன் விதிகளையும் இதில் சொல்லியிருக்கிறது. கி. பி. 580 முதல் 618 வரையில் அரசாண்ட சூய் வம்சத்தாரின் நூல் வரிசையைப் பார்த்தால் இந்தியக் கணித நூலையும், கணித முறைகளையும் அறிந்து எழுதப்பெற்ற பல புத்தகங்கள் இருந்தது தெரியவருகிறது.

சீனத்துக்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்பானது இதற்கு நெடுங்காலத்துக்கு முன்னமேயே ஏற்பட்டது. சாதாரணமாக நாம் எண்ணுவதைவிட விரிந்த அளவிலும், நீண்டகாலத்துக்கும் இத்தொடர்பு இருந்துவந்தது. பாஹியனையும் யுவான் சுவாங்கையும் ஒருகால் இட்சிங்

கையும்பற்றி அனேகருக்குத் தெரியக்கூடும். ஏதோ ஒரு சமயம் வந்த யாத்திரிகர்களைக் குறித்துப் பிரமாதப்படுத்தி யிருப்பதாக அவர்கள் நினைப்பார்கள். உண்மை அப்படி யல்ல. இட்சிங் என்பவர் தாம் இந்தியாவில் கண்ட சீனத் துறவிகள் அறுபதுபேரைக் குறிப்பிடுகிறார். இவர்கள் பௌத்த சமயம் பிறந்த இந்தப் புனிதநாட்டிற்கு யாத்திரை யாக வந்தவர்கள். அல்லது நாலந்தா கலாசாலையில் கல்வி பயில்வதற்காகவும், இதுபோன்ற வேறு காரணங்களுக்காக வும் வந்தவர்கள். சிலர் அரசாங்க சம்பந்தமான செய்திகளை யும் கடிதங்களையும் தாங்கி இந்நாட்டு ஹிந்து மன்னர்களைப் பார்க்கவந்தவர்கள். மைசூரில் கி.மு. மூன்றும் நூற்றாண்டுக் குரிய சீனநாணயம் ஒன்றுகிடைத்தது. பான்கூ என்ற புரா தன சீன சரித்திரக்காரர் காஞ்சியை (ஹுவான்சி என்று) குறிப்பிடுகிறார். கிறிஸ்து அப்தம் தொடங்குவதற்கு முன் சீனத்துக்கும், இந்தியாவுக்கும் கடல் வியாபாரம் ஆரம்ப மாகிவிட்டதென்று இவற்றால் நாம் தெரியலாம். இவை எப்படியிருப்பினும் கி. பி. முதல் நூற்றாண்டில் பௌத்த சமயம் சீனத்தில் பரவியதன் காரணமாக இருநாடுகளும் நெருங்கிய தொடர்பு கொண்டன. மத்திய ஆசிய பீட பூமிகள் வழியாகத் தரை மூலமாகவும், ஆசியாவின் தென் கிழக்கில் ஏற்பட்ட ஹிந்துக் குடியேற்ற நாடுகளைச்சுற்றிக் கடல் மூலமாகவும் பரஸ்பரப் போக்குவரத்து ஏற்பட்டது. 7-வது, 8-வது நூற்றாண்டுகளில் இது மிகுதியாகப் பெருகி யிருந்தது. தெற்கில் நாகப்பட்டினமும், வடக்கில் தாம்ர லிப்தி நகரமும் இந்தக் கடல் போக்கு வரத்துக்கு அனு கூலமாயிருந்த முக்கிய துறைமுகங்கள். இவ்விரு நாடு களுக்குமிடையே ஏற்பட்டுள்ள இந்தத் தொடர்பு எவ் வளவு முக்கியமானது என்பதுபற்றி ரேனே குரூசே என்ற பிரெஞ்சுப் பண்டிதர் பின்வருமாறு சொல்லுகிறார்: "காலம் ஏழாம் நூற்றாண்டு; அப்போது மேலைநாட்டு நாகரிகம் இருள் அடைந்திருந்தது. ஆனால் தொலைவிலே

கீழ்த்திசையில் இந்தியாவும் சீனமும் அரசியலிலும், அறிவு, சமயம், கலை ஆகிய துறைகளிலும் உன்னதமான வாழ்க்கை வாழ்ந்து வந்தன. பௌத்த சமயம் இவ்விரு நாடுகளையும் ஒன்றுபடுத்திற்று. அதன் மூலமாய்த் தென்கோடியில் உள்ள இலங்கைத் தீவு முதல் வடகீழ்க் கோடியில் உள்ள ஜப்பானியத் தீவு வரையில் ஒரே அன்பு உணர்ச்சி ததும்பி நின்றது. ஆயிரம் ஆண்டுச் சிந்தனையின் பயனாகப் பௌத்த தத்துவங்கள் நினைக்கமுடியாத சக்தி வாய்ந்தனவாக ஆயின. அவற்றால் இந்தியக் கலையுணர்ச்சிக்கும் புதிய எழுச்சி பிறந்தது. புதிய கருத்துக்களை ஏற்று அவற்றுக் கேற்பத் தன்னை மாற்றிக்கொள்ளத் தயாராய் இருந்த சீன நாட்டில் சீனருடைய வேகமெல்லாம் இந்த அமைதியான அன்புக்கு அடங்கித் தணிந்தது. ஏதென்ஸ் நகரத்திலும் அலக்ஸாண்ட்ரியா நகரத்திலும் இருந்ததுபோன்றமேன்மை யான வாழ்க்கை அங்கே நிலவியது. அதுவே மத்திய ஆசியாவில் நிகழ்ந்த சீனப் பெரு செய்திகளின் காலம்; மக்கள் கங்காநதி தீரத்துக்கு யாத்திரை செய்த காலம். மகாயான லட்சிய நெறியும் குப்தவம்சத்தாரின் சிற்பக்கலையும் ஓங்கி நின்ற காலம்.'' இந்தத் தொடர்பு இரண்டு பக்கத்திலும் இருந்தது. பண்டிதர்கள் பலர் இந்தியாவிலிருந்து சீனத்துக்குச்சென்று சம்ஸ்கிருத நூல்களைச் சீனமொழியில் எழுதத் துணை புரிந்தார்கள். இதன் பயனாக வேறு வகையிலே அறியப்படாத பல நூல்கள் இன்று சீன மொழி பெயர்ப்பு மூலமாய்க் கிடைக்கின்றன. சிறிது காலம் தொடர்பு குன்றியிருந்த பிறகு பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும், பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்திய சீனத்தொடர்புகள் மீண்டும் நெருக்கமாக ஏற்பட ஆரம்பித்தன. இப்புதுத் தொடர்பை புத்த கயாவில் காணப்படும் சீனச்சாசனங்கள் ஐந்தும் காட்டுகின்றன. சென்ற தலைமுறையில் சீன ஆராய்ச்சியில் புகழ்பெற்று விளங்கிய பிரஞ்சு அறிஞரான எட்வர்டு ஷாவன்னிஸ் என்பவர் இங்

தச் சாசனங்களைப் பதிப்பித்தபோது, 982-ஆம் ஆண்டில் மொழிபெயர்ப்பு சபையொன்று சீனுவில் நிறுவப்பெற்ற தாகக் குறிப்பிட்டிருக்கிருர். இதில் ஹிந்துக்கள் மூவர் தலைமை வகித்தார்கள். பிற்பட்டு ஏராளமாக ஹிந்துக்கள் வந்து இந்தச் சபையின் வேலையில் துணை புரிந்தார்கள். மேற்சொன்ன தொடர்புகள் சரித்திரத்தில் எவ்வளவு முக்கியமானவை என்பதுபற்றி அவருடைய சொற்களையே இங்குக் குறிப்பிடுதல் போதும்: "புத்த கயாவில் உள்ள சாசனங்கள் தோன்றிய காலத்தில் சரித்திர நிலைமைகள் எப்படியிருந்தன என்பதை ஆராயப் புகுந்ததில் பத்தாம் நூற்றுண்டின் கடைசியிலும், பதினொராம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் இந்திய, சீன சமயத் தொடர்பானது புதுப்பிக்கப்பெற்று வந்தது. பௌத்த சமயப் பிரசாரம் ஒரு பேரியக்கமாகவே நிகழ்ந்து வந்தது நமக்குத் தெரியும். யுவான் சுவாங், இட்சிங் என்பவர்களோடு இது ஏழாம் நூற்றுண்டில் உச்சநிலையை அடைந்திருந்தது. ஆனல் மூன்று நூற்றுண்டுகள் கழித்துச் சமய உணர்ச்சியில் ஏற்பட்ட புதிய விழிப்பை யாரும் இதுவரையில் கவனித்ததாகத் தெரியவில்லை. பொதுநோக்காகப் பார்க்கும் போது மக்களினத்தின் அறிவு வளர்ச்சியைக் கூறும் சரித்திரத்தில் புத்த யாத்திரிகர்கள் பிற நாடுகளுக்குப் பிரயாணம்செய்த வரலாறுகள் முக்கிய இடம்பெறுகின்றன. இம்மாதிரிப் பிரயாணம்செய்த சிரமணர்களில் பலர் அடியோடு மறைந்தே போய்விட்டனர். பலரின் பெயர்கள் மட்டுமே நமக்கு இன்று தெரியவருகின்றன. ஆயினும், இவர்களால் சிறந்த பயன் விளைந்திருக்கிறது. இருவேறு நாகரிகங்களில் மேலான அம்சங்கள், பொதுப்படையான பண்புகள் என்னென்ன இருந்தனவோ அவற்றை யெல்லாம் இவர்கள் ஒற்றுமைப்படுத்தினுர்கள். காலவெள்ளமானது சிற்சில சமயங்களில் மக்களை வெகு வேகமாக இழுத்துச் சுழற்றி அவர்களை அறியாமலே அவர்களிடையே பெரும் கிளர்ச்சியைத்

தோற்றுவிக்கிறது. இதன் வேகத்தால் உந்தப்பட்டு அவர்கள் பேராறுகளையும், பனிமூடிய மலைஉச்சிகளையும், பாலைவனத்தையும், பரந்த கடற்பரப்பையும் கடந்து, பலவேறு மக்களினத்திற்கு இடையிலுள்ள பொருமை காரணமாய் ஏற்பட்ட தடைகளையும் தாண்டிச் சென்று, ஆங்காங்குள்ள மக்களிடையே அறிவிலும், ஆன்மநேயத்திலும் நெருங்கிய ஒற்றுமையுணர்ச்சி ஏற்படுமாறு செய்தார்கள். இருவேறு உலகங்கள் இவ்வாறு அமைதியாக ஒன்றோடொன்று அணுகிக் கலந்ததை இறுதிவரை ஆராய்வது எவ்வளவோ சுவையுடையது.''

விக்கிரமசகாப்தத்தின் இரண்டாவது ஆயிரம் ஆண்டுகளின் இயல்பானது முற்றிலும் வேறாயுள்ளது. இந்தியா இப்போது அயலார் தொந்தரவின்றி தனியே நிற்கவில்லை. இந்திய நாகரிகத்தின் சிறப்பைக்கண்டு பெரிதும் வியந்து இந்திய சமுதாயத்திலே சேர்ந்துகொண்டால்மட்டும் போதும் என்று எண்ணிய இனத்தார் மாத்திரம் இந்தியாவினுள் நுழைந்தார்கள் என்பதும் இல்லை. வடமேற்குத் திசைவழியாக இஸ்லாமியத் துருக்கர்கள் இந்தியாவைத் தாக்கத் தொடங்கியபோது, வட இந்தியாவில் சிறு நாடுகளே இருந்தன. துருக்கியர் கொடிய போர்வீரர்கள். தங்கள் சமயத்தை ஏற்காதவனோடு போர் புரிவதே கடமை என்பது அவர்களுடைய சமயக் கொள்கை. வெற்றி கொண்ட முஸ்லிம் வீரன், தோற்றவனை மதமாற்ற வேண்டும் அல்லது கொல்ல வேண்டும் அல்லது அடிமைப்படுத்த வேண்டும் என்பதே சட்டத்தின் வாசகம். ஆரம்பத்திலேயே இந்த விதி தளர்த்தப்பட்டது உண்மை. முஸ்லிம் அல்லாதவர்கள் ஜிஸ்யா என்று சொல்லப்பட்ட ஒரு விசேஷ வரியைக் கொடுக்கவேண்டியிருந்தது. ஆயினும் பால்க் நாட்டி

லுள்ள நவ்பீஹார் என்ற இடம் முதல் போர்னியோவில் உள்ள குட்டேயி என்ற இடம் வரையில் அடங்கிய விசால மான பிரதேசமெங்கும் அமைதியின் பெயரால் வந்த இந்தப் புதிய மதத்துக்கும் ஹிந்து சமுதாயத்திற்குமேற் பட்ட சம்பந்தத்தின் பலன் என்னவென்றால், சர்வநாசமும் பிளவுமேயாகும். டில்லியில் முதலாவது மசூதி 1198-இல் கட்டி முடிக்கப்பட்டது. ஒரு ஹிந்துக்கோயில் இருந்த இடத்தில் அது கட்டப்பட்டது. அதன் கிழக்குச் சுவரில் உள்ள அரபிமொழிச்சாசனமொன்று, அதைக்கட்டுவதற்கு, விக்கிரக ஆராதனை செய்யும் இருபத்தேழு கோயில்களி லுள்ள சாமான்கள் உபயோகிக்கப்பட்டன என்று கூறு கின்றது. இப்படி வந்த பகைவர்களுடைய பலம் நாளுக்கு நாள் வளர்ந்துவந்தது. எதற்கும் விட்டுக்கொடாத பகைமை இவர்களிடம் இருந்தமையால், முன்னேற்றத்தைவிட அமைதியே பெரிதென்று ஆரம்பமுதல் கருதிவந்த ஹிந்து சமயமானது, புதியவற்றை ஏற்க மறுத்துவிட்டது ; முன்னி லும் தீவிரமாகப் பழமையைப் பற்றிக்கொண்டது. எதைக் கண்டாலும் சந்தேகப்படுகிற விரிவில்லாத வைதிக மனப் பான்மை குடிகொண்டது. ஸ்தாபனங்கள் உணர்ச்சியற் றுக் கல்லாகிப் புதிய நிலைமைகளைச் சமாளிக்கும் திறமை யிழந்துவிட்டன. பெண்கள் அந்தப்புரத்தில் அடைத்து வைக்கப்பட்டனர். உணவிலும் கல்யாண விஷயத்திலும் கடுமையான நிர்ப்பந்தங்கள் பிறந்தன. சுதந்திர உணர்ச்சி பின்னுக்குப் போய்விட்டது. விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதே முக்கியமாயிற்று. புதியதாக எதையும் ஆக்கும் திறன் போய்விட்டது. கண்மூடித்தனமாக, இருப்பதை அப்படியே பற்றிக்கொள்ளும் மனப்பான்மையுடைய காலம் தொடங்கிற்று. இஸ்லாம் வந்தது காரணமாக ஏற் பட்ட. இந்தப் போக்குக்களைத் தூண்டிவிட வேறுகாரணங்

களும் துணைபுரிந்தன. ஐரோப்பியப் பாதிரிகளும் வியாபாரிகளும் இதற்குத் துணைபுரிந்தார்கள். இவற்றையெல்லாம் இங்கே விரிவாகச் சொல்ல இடமில்லை. முக்கியமானவற்றை மட்டும் சுருக்கமாய்ச் சொல்லலாம்.

முகம்மது இந்தியாவுக்குள் நுழைந்த பின்னர், ஆப்கனிஸ்தானத்தில் உள்ள கஜினியைத் தலைநகராகக்கொண்டு, வடமேற்கு இந்தியாவைத் துருக்கியர் ஆண்டுவந்த பதினொராவது - பன்னிரண்டாவது நூற்றாண்டுகள் அவர்களுடைய ஆட்சிக்கு ஆரம்ப தசையாகும். ஆயினும், காசி வரையிலும் அதற்கப்பாலும் முகம்மது படையெடுத்து வந்ததுபோல அவர்களும் படையெடுத்து வந்தார்கள். இதனால், வடமேற்குத் திசையிலிருந்து இந்திய அரசியலுக்கும் சமயத்திற்கும் எவ்வளவு பெரிய ஆபத்து வரவிருந்தது என்று வட இந்திய மக்கள் அனைவரும் தெளிவாக உணரமுடிந்தது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் டில்லியில் துருக்கியஅரசுநிலை நாட்டப்பெற்று அனேகமாய் வட இந்தியா முழுவதும் தனி அரசு செலுத்திவந்தது. இதைத் தடுக்க ஹிந்து மன்னர்கள் ஒன்றும் செய்யமுடியவில்லை. அடுத்த நூற்றாண்டில் தக்காணத்திலும் தென் இந்தியாவிலும் அத் துருக்கிய அரசு பரவ ஆரம்பித்தது. பதினைந்தாம் நூண்றாண்டில் முகலாயனான தைமூர் படையெடுத்து அழித்தல் வேலையை மேற்கொண்டதனால், அக்கால முழுதும் ஒரே குழப்பமும் போருமா யிருந்தன. இதில் ஆப்கானிய வம்சம் மிஞ்சி நின்றது. பதினாறாம் நூற்றாண்டில் முகல் சாம்ராஜ்யம் நிறுவப்பெற்றது. அக்பருடைய புகழ் ஓங்கிற்று. அக்பருடைய நல்லரசின்பயன் அடுத்த நூற்றாண்டில் பாதிவரையில் நின்றது. அதன்பின், உடன்பிறந்தாருக்குள் ஏற்பட்ட சண்டையும் கொலையும் காரணமாக, ஒளரங்கசீப் பட்டத்திற்கு வந்தான். அவனுடைய நல்லெண்ணங்க

MARAI

ளெல்லாம் அவனே பாழாக்கிக் கொண்டான். எந்தக் கொள்கைகளைக் கடைப்பிடித்து அக்பர் தனது சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்துப் பரிபாலித்து வந்தானோ அந்தக் கொள்கைகளைத் தலைகீழாக மாற்றிச் சாம்ராஜ்யத்தையே சின்னபின்னமாக்குவது ஔரங்கசீப்பின் வேலையாகிவிட்டது. கலகம் மலிந்த மற்றொரு நூற்றாண்டிற்குள் முகலாய சாம்ராஜ்யம் வீழ்ச்சி யடைந்தது. பதினெட்டாம் நூற்றாண்டு முடிவதற்குள், கிழக்கிந்தியக் கம்பெனியார் பிற ஐரோப்பியரை யெல்லாம் அடக்கிவிட்டுத் தனி ஆதிக்கம் பெற்று, இந்தியா முழுமையும் தங்கள் வசப்படுத்திவிட்டார்கள்.

துருக்கிய அரசு கொடுங்கோன்மை குடிகொண்டது. இன்னும் செவ்வையாக அது நடைபெற்றிருக்குமானால்,அதனால் இன்னும் அதிகத் தீமைகள் விளைந்திருக்கக்கூடும். வட இந்தியாவில் ராஜபுதனத்திலும் வேறு சில இடங்களிலும் அவ்வரசுக்கு வெற்றிகரமான எதிர்ப்பு இருந்தது. தென் இந்தியாவில் துருக்கிய அரசு பரவ முயன்றபோது, தக்காணத்தில் ஆண்டுவந்த யாதவரும் காகதீயரும், இன்னும் தெற்கில் ஆண்ட ஹொய்சலரும், பாண்டியரும் அதை ஓரளவுக்கு எதிர்த்துத் தடை செய்து வந்தார்கள். இந்தத் தடை நிற்கவில்லையாயினும், ஹிந்துக்களிடையே ஏற்பட்ட மனக்கொதிப்புக் காரணமாக, பிரசித்திபெற்ற விஜயநகர சாம்ராஜ்யம் எழுந்தது. ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் வரையில் இஸ்லாமிய ஆதிக்கம் தென்னிந்தியாவில் ஏற்படாதவாறு இது காத்தது. ஆனால் முதலில் பகைமையால் ஏற்பட்ட அதிர்ச்சிகள் நீங்கியபின், பரஸ்பர விரோதம் எவ்வளவு இருந்த போதிலும், படையெடுத்தோருக்கும் நாட்டில் வாழ்ந்தோருக்குமிடையே எப்படியோ ஒருவகை

யான சமாதானம் ஏற்பட்டது. இது இஸ்லாமியச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள கண்டிப்பான விதிகளுக்கு வேருனது. புதிதாக வந்த வீரர்களுக்கும் செல்வர்களுக்கும் மணமாக வேண்டியிருந்தது. தாங்கள் எந்த இடத்தில் தங்கினார்களோ அந்த இடத்தில் உள்ள பெண்களையே மணந்துகொண்டார்கள். ஆள்பவருக்கும் ஆளப்பட்டோருக்குமிடையே இருந்த இனவேற்றுமை விரைவில் மறைந்துவிட்டது. சமயவேற்றுமையொன்றே எஞ்சி நின்றது. பிருஸ் துக்ளக்கின் தாய் ஒரு ஹிந்து ஸ்திரீ. அவனுடைய மந்திரி மக்பூல் என்பவன் பிராமணனுயிருந்து இஸ்லாமைத் தழுவியவன். பெரிதும் துன்புற்றிருந்த மக்களுக்கு இவ்விருவரும் நடத்திய ஆட்சி ஓரளவு நன்மையைச் செய்தது. கிராம சுயாட்சி முறைக்கு, புதிய அரசாங்கத்தாலும் அதன் அதிகாரிகளாலும் மிகுதியான வரிகள் விதிக்கப்பெற்ற போதிலும், அது அழியாமல் ஓரளவு ஓங்கிநின்றது. மக்கள் பேச்சிலே பாரசீகம் கலக்க ஆரம்பித்தது. ஹிந்தியும் பாரசீகச் சொற்களும் சொல்லமைப்பும் கலந்து, உருது என்ற புது மொழி உண்டாயிற்று. இந்திய இஸ்லாம் மார்க்கமும், தன் இனத்துக்குள் சாதி வேற்றுமையை ஏற்றுக்கொண்டு, அந்த அளவுக்கு ஹிந்து மதத்தை ஒத்துவிட்டது. ஹிந்து முஸ்லிம்களுக்கிடையே, முக்கியமாகத் தக்காணத்தில், சமயம்பற்றிய விவகாரங்கள் ஒதுங்கி, அரசியல் விவகாரங்களும் வேறு பல விவகாரங்களுமே முக்கியமாகி வந்தன. காசி முதலிய இடங்களிலும், ஹிந்து நியாய சபைகளிலும் ஹிந்து நியாய சாஸ்திரமும், தத்துவ சாஸ்திரமும் பண்டை முறையிலேயே பயிலப்பெற்று வந்தன. புதிதாக எதுவும் ஆக்கப்பெறவில்லை. பழைய நூல்களுக்குச் சுருக்கமும் வியாக்கியானங்களுமே தோன்றின. வடமொழி இலக்கியத்தில் கற்

பனைத்திறம் என்பது ஏற்கெனவே போய்விட்டது. அல்லது இக்காலத்தில் மறைந்து வந்தது. ஆயினும் பாரசீகச் சரித்திரக்காரர்கள் தொடர்பு காரணமாக, வடமொழியிலும் வழக்கிலுள்ள பிற மொழிகளிலும், பாட்டு வடிவத்தில் சரித்திரத்தையும் நாட்டு வரலாற்றையும் சொல்வது புதிய இலக்கிய வகையாக வளர்ந்தது. இசையிலும் நாட்டியத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டன. ஆயினும் துருக்கியரோடு சம்பந்தம் ஏற்பட்டதன் காரணமாக, ஹிந்து நாகரிகத்தில் இலக்கியத்திலோ வேறு எந்தக் கலையிலோ முக்கியமான வளர்ச்சி எதுவும் ஏற்பட்டதென்று நேர்முகமாக ஒன்றைச் சுட்டிக்காட்ட இடமில்லை. கட்டிடக் கலையிலே இந்து முஸ்லிம் கட்டிடத் தொழிலில் மிகுதியாய் நாம் காண்கின்ற சுண்ணும்பு வேலையானது இந்தக் காலத்தில் தான் தொடங்கிற்று. பக்தி மார்க்கத்தைத் தழுவிப் புதிய சமய நெறிகள் பிறந்தன. இவற்றில் தோன்றிய மகான்கள் ராமானந்தர், மீராபாய், குருநானக், சைதன்யர், கபீர் முதலியோர் ஆவர். ஆனல் கபீர் ஒருவரைத் தவிர மற்ற எவருடைய நூல்களிலும் இஸ்லாத்தின் போக்கைக் காண்பது அரிது. வங்காளம் அனேகமாய்த் தனித்த நாடாகவே இருந்து வந்ததென்பதைக் குறிப்பிட வேண்டும். பாலர் வமிசத்துக்குப் பின் அங்கு சேன வமிசத்தார் ஆண்டனர். லக்ஷ்மண சேனன் சபையைப் புகழ்பெற்ற இசைவாணராகிய ஜெயதேவர் அலங்கரித்தார். இக்காலம் பிற்பட்டுச் சைதன்யர் தோன்றுவதற்கு அனுகூலமா யிருந்தது. இதனடியாகவே வங்காள வைஷ்ணவ இலக்கியமும் பிறக்க இடமுண்டாயிற்று. வங்காளத்திலும் இஸ்லாம் மேலோங்கிற்று. துருக்கியருடைய செல்வாக்கும், பாரசீகமும், ஹிந்துஸ்தானியும் அங்குக் குறைவு. வைதிக ஹிந்து சமயமானது கீழ்ப்பட்ட மக்களைக் கொடுமையாக நடத்தியது

காரணமாக, சமூகக் கொடுமையினின்றும் தப்பும் பொருட்டு, மக்களில் பலர் இஸ்லாத்தைத் தழுவினர். இதன் பயனாக, ஆள்பவருக்கும் மக்களுக்கும் ஆரம்பத்தி லிருந்தே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. பழமையும் புதுமையும் நல்ல முறையில் சிறிதளவாவது ஒன்றிப் போயின.

பொதுவாக முகலாய அரசு ஒரு நல்ல காலம். அக்பரே உண்மையில் அவ்வரசை நிலை நாட்டியவன் என்று சொல்ல லாம். உலகத்தில் சிறந்த ராஜ தந்திரிகளில் அவனும் ஒருவன். இளமையிலேயே இந்திய அரசியல் நிலையின் சாரம் என்ன என்பதை அவன் உணர்ந்தான். இந்தியாவில் முகலாய ஆட்சியை வலியுள்ளதாகச் செய்து பிற நாட்டார் இந்தியாவை மதிக்கும்படிச் செய்ய வேண்டுமானால், மன்ன னுக்கும் மக்களுக்குமிடையில் இருந்த வேற்றுமைகளைப் போக்கி, ஹிந்துக்களின் சுய மரியாதையை நிலைநிறுத்தி, இந்து முஸ்லிம்களுக்கிடையில் சமுதாய ஒற்றுமையையும் பரஸ்பர நல்லுணர்ச்சியையும் மேலோங்கச் செய்வதே அதற்கான வழி என்று கண்டான். தான் கண்ட கனவு களை நனவாக்கும் பொருட்டு ஒரு பெரிய சமயத்தை அவன் ஏற்படுத்த முயன்றது பெரும் தவறாகும். ஆயினும், அவன் செய்த வேலை நிலைத்த நன்மையுடையதாய் இருந்தது. இயல்பாக அதனால் நன்மையே விளைந்தது. ஷாஜஹான் அரைமனதோடு அந்த நன்மைகளில் ஒரு பகுதியை வேண்டு மென்றே கெடுத்துவிட்டான். ஔரங்கசீப்போ, முற்றிலும் சின்னாபின்ன மாக்கிவிட்டான். அயலிடங்களிலிருந்து கிடைத்த கருத்துக்களைச் சேர்த்துப் புராதன இந்திய முறையை உருவாக்கிப் பொது அரசிறை ஏற்பாட்டுக்கு அக்பர் அடிகோலினான். அந்த ஏற்பாடு இன்றைய அர

சாங்கங்களின் நில வருமானக் கொள்கைகளுக்கு அடிப்படையாயிருந்து வருகிறது. சிற்பத் துறையில் அவனுடைய கட்டிடங்கள் ஒவ்வொன்றிலும் இந்து முஸ்லிம் பண்புகள் அழகாகப் பொருந்தியிருக்கின்றன. ராஜபுத்திரர்களிடம் அவன் நடந்துகொண்ட முறை காரணமாகப் பெருமைகொண்ட அந்த வீரர்கள் அவனேடு நட்புப் பூண்டிருப்பதில் பெருமிதமடைந்தார்கள். முகலாய அரச குடும்பத்தில் தங்கள் பெண்களைக் கல்யாணம் செய்து கொடுக்கவும் தயாரா யிருந்தார்கள். தோடர்மால், தான் சேன், துளசிதாஸ் என்ற பெயர்கள் அக்காலத்தில் ஏற்பட்டுவந்த ஒருமையுணர்ச்சியை நினைவூட்டுகின்றன. ஆனல் இந்த நன்மை நீடித்து நிற்கவில்லை. ஔரங்கசீப் வந்த பின்னர் அவன் ஆட்சி காரணமாக ராஜபுத்திரரும், மராட்டியரும், சீக்கியரும், பிறரும் கலகம் செய்யும்படியாயிற்று. இந்தக் கலகங்கள் மக்களுடைய சுதந்திர உணர்ச்சியைப் புதுப்பிக்க முடியாதபோதிலும், அக்கொடுங்கோலனுடைய ஆட்சிக்கு ஓரளவு ஆட்டங் கொடுத்தன. தன் வாழ்நாள் முழுதும் போரிலும் பாசறையிலுமாகக் கழித்துக் கிழவனுகிவிட்ட ஔரங்கசீப் தன் நோக்கம் ஒன்றையும் நிறைவேற்ற முடியாமல், ஒருவரையும் நம்பாமல், ஒருவருடைய அன்பையும் பெருமல், இறந்தான். அவனுடைய ராஜ்யத்தில், அசைக்க முடியாத மனநிலையுடைய அவனுடைய செல்வாக்கைத் தவிர, ஒற்றுமைக்கான சின்னங்கள் யாவும் மறைந்துவிட்டன. அவ்வளவு பெரிய சாம்ராஜ்யம் அவன் இறந்தபின் சின்னுபின்னுமாகிவிட்டது. முகலாயர் கட்டிய பெரிய கட்டிடங்களும் மசூதிகளும் சமாதிகளும், அரண் செய்யப்பெற்ற அரண்மனைகளும், இனிய தோட்டங்களும், சிறிய வடிவிலே எழுதப்பெற்ற மாணிக்கம்போன்ற ஓவியங்களும்

முகலாய ஆட்சிக்குச் சிறப்பான சின்னங்கள். இவற்றுள் எல்லா விதத்திலும் பெருமை வாய்ந்தது, தாஜ்மஹால் என்பது சொல்ல வேண்டியதில்லை.

இந்திய மக்களுடைய கருத்தையொட்டிப் பிரிட்டிஷ்இந்திய சரித்திரத்தை யாரும் முறையாக ஆராய்ந்ததில்லை. சென்ற நூற்றுண்டில் சரித்திரம் எழுதிய பிரிட்டிஷ்காரர்களைவிட இப்போது எழுதும் பிரிட்டிஷ் சரித்திரக்காரர்கள் இரண்டொருவரைத் தவிர மற்றெல்லோரும் இது விஷயத்தில் மௌனமா யிருக்கிறார்கள். மராட்டியர்கள், சீக்கியர்கள், ஹைதர்அலி, திப்புசுல்தான் ஆகியோரைப்போல இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் வளர்வதை எதிர்த்து நின்றவர்களின் வீரச் செயல்களைக் குறித்து இப்போதுள்ள சரித்திரப் புத்தகங்கள் நியாயமான அளவு சொல்லவில்லை என்று எண்ண இடமிருக்கிறது. ஆயினும், இந்த ஆராய்ச்சியில் போர்களையும், ராஜ தந்திரத்தையும் குறித்தும் இந்தியாவை பிரிட்டிஷார் கைப்பற்றியதைக் குறித்தும் விவரமாக ஆராய வேண்டிய அவசியமில்லை. இந்நாட்டைப் பிரிட்டிஷார் கைப்பற்றி ஆண்டதனால் பலவேறு துறைகளில் விளைந்த பலனை ஓரளவு ஆராய்வதே இங்குப் போதுமானதாகும்.

சமூகத்தில் இந்தியரும் ஆங்கிலேயரும் ஒருவரையொருவர் விட்டுவிலகியே நின்றிருக்கிறார்கள். பொதுவாகச் சொன்னால் பரஸ்பரம் அவநம்பிக்கையே குடிகொண்டிருக்கிறது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆரம்ப காலத்தில் சிலர் இந்தியப் பெண்களைச் சேர்த்துக்கொண்டார்கள். பாரசீகப் பாடல்களை எழுதினார்கள். கல்யாணங்களில் கலந்து கொண்டார்கள். சமமான முறையிலே இந்தியர்களோடு ஒத்துப் பழகினார்கள். ஆனால் அந்தக் காலம் லஞ்சமும், தனிப்பட்ட வியாபாரமும், விவசாயிகளையும் தொழிலாளி

களையும் கொடுமையாக நடத்தும் பழக்கமும் மிகுந்திருந்த காலம். அவ்வளவு கீழ்த்தரமான காலத்திலும்கூட ஆங்கிலேயர் பழகிப் பொருந்திய சமூகம் இந்திய சமுதாயத்தில் சிறந்ததல்ல. பிறகு காரன்வாலிஸ் பிரபு வந்தார். நிர்வாகத்தை ஒழுங்குபெற அமைத்துச் சம்பளத்தை உயர்த்தி வைத்தார். இவ்வுயர்வினுல், ஆளப்பெற்ற மக்களிடம் ஏழ்மை மலிந்திருக்க, அவர்களை ஆண்ட ஆங்கிலேய அதிகாரிகள் உயர்ந்த நிலையில் இருக்கமுடிந்தது. தங்கள் ஆங்கிலேய மனைவிகளை அழைத்துவந்து தனித்த ஆங்கிலேயச்சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்முடிந்தது. உயர்ந்த சம்பளம்கொடுத்ததனுல் ஏற்பட்ட இந்தநிலையை, 1857-ஆம் ஆண்டில் தோன்றிய சிப்பாய்க் கலகமும், இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமிடையே ஏற்பட்டுவந்த போக்கு வரத்து வசதிப்பெருக்கும் பூர்த்திசெய்தன. பாதிரிமார்கள் பொதுவாக மற்றவர்களைப்போல் அவ்வளவு தனித்து நிற்பதில்லை. இந்தியர்களும் அவர்களும் ஒருவர் வீட்டிற்கு மற்றவர் போய்ச் சமமாகப் பழகுகிருர்கள். இந்தியர்கள் மனப்பான்மை என்ன என்பதைச் சிறிது உணர்ந்தும் நடக்கிருர்கள். ஆனுல் பாடசாலைகளிலும், வைத்தியசாலைகளிலும் அவர்கள் தங்கள் சொந்த வேலையையே கவனித்து வருகிருர்கள். முக்கியமான விவகாரங்களில் அவர்களுக்கு எவ்விதச் செல்வாக்குமில்லை. தவிர இந்தியர்களோடு அவர்கள் மிக நெருங்கிப் பழகிவிடும்பட்சத்தில், ஆங்கிலேயே அதிகாரிகள் அவர்களுக்கு உபத்திரவம் விளைவிக்கிருர்கள். இந்திய நாகரிகத்தைப் பொறுத்தவரையில் ஆங்கிலேயருடையமனப்பான்மையும் திட்டமாக மாறியிருக்கிறது. வாரன் ஹேஸ்டிங்ஸ், சர். வில்லியம் ஜோன்ஸ், கோல்புருக், வில்சன் போன்ருர் இந்நாட்டு மக்களிடையே இருந்த கல்வியையும், நாகரிகத்தையும் சிறிது மதித்தார்கள். இந்நாட்டு நியாய

சாஸ்திரத்தையும் தத்துவ சாஸ்திரத்தையும் சமயத்தையும் இலக்கியத்தையும் உணர்ந்துகொள்ளப் பெரிதும் முயன்ருர்கள். ஆனுல் விரைவிலே இந்த நிலைமாறி, இந்திய நாகரிகத்தை அவமதிக்காவிட்டாலும் பராமுகம் செய்கிற நிலை வந்துவிட்டது. இதற்குச் சிகரமாய் அமைந்தது, மெக்காலேயினுடைய இந்தியக் கல்வி முறை. அதுமுதல் இந்தியாவில் உள்ள சாதாரண பிரிட்டிஷ் அதிகாரியானவன் இந்திய மக்கள் நாகரிகமில்லாத காட்டுமிராண்டிகள் என்றும், அவர்களுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்றும் அவர்களிடையே தான் இருக்கவேண்டி வந்தது தீவினை வசத்தினுல் என்றும் எண்ணுவதுபோல நடந்துகொள்வதே வழக்கமாகிவிட்டது. தவிர, தம்மோடு ஒத்த மக்கள்மீது அளவற்ற அதிகாரம் செலுத்தக்கூடிய நிலைமையில் ஒருவர் இருக்க நேர்ந்தால், அவர் எவ்வளவு சிறந்தவராக இருந்தபோதிலும் அவருடைய உணர்ச்சி நிச்சயமாய்த் திரிந்து போய்விடுகிறது என்பதையும் கருதவேண்டும். எவ்விதத் தடையுமில்லாமல் ஒரு நூருண்டு காலம் இப்படி நடந்திருக்கிறது. இதனுல், இந்தியாவில் ஆங்கிலேயருக்கும் இந்தியருக்குமிடையில் உள்ள தொடர்பை உணர்வது எளிதாகும். தீர்க்கதிருஷ்டியுள்ள அறிஞர் சிலர், இதனுல் விளையவிருக்கும் அபாயத்தை உணர்ந்த உண்மை. இந்தியா என்ன பாடங் கற்பிக்கிறது என்பதைப் புதிதாக வரவிருக்கும் ஆங்கிலேய நிர்வாகிகளுக்கு உணர்த்த மாக்ஸ் முல்லர் முயன்ருர். ஜெர்மனியில் வடமொழிக்குரிய ஆசிரிய ஸ்தானம் இருபது இருக்க இங்கிலாந்தில் இரண்டு தானிருப்பது மிகக் குறைவு என்று மக்டானல் எடுத்துக் காட்டினுர். ஆயினும், காலவேகம் வேறு திசையில் மிக வலிவாகச் சென்றுகொண்டிருந்தது. இவர்கள் முயற்சியினுல் அந்தத் திசையைச் சிறிதும் மாற்ற முடியவில்லை.

மெக்காலேயையும் இந்தியக் கல்வி முறையைப்பற்றிய அவருடைய குறிப்பையும்பற்றிச் சொல்லியவுடனே அந்த முறையினுல் விளைந்த பயனை ஆராயவேண்டி வருகிறது. மெக்காலேக்கும் கீழ்நாட்டுக் கல்வியைக் கற்க விரும்பியவருக்கும் இடையிலே ஏற்பட்டுள்ள விவாதத்தில் எல்லா விவாதங்களுக்கும் பொதுவான அமிசங்களே காணப்படுகின்றன. இருதிறத்தாரும் உண்மையான நிலைமையில் ஒரு பகுதியைப் பற்றிக்கொண்டு அதுவே முழுநிலைமை என்று வாதாடினுர்கள். வாதத்திலே வெற்றி பெற்றவர்கள், எந்தப் பகுதியைத் தோற்றவர்கள் எடுத்துச் சொன்னுர்களோ அதை உண்மையில் புறக்கணித்துவிட்டார்கள். ஆகவே, எல்லா விஷயத்தையும் இந்தியர்கள் அயல்நாட்டிலிருந்தே கற்றுக் கொள்ளவேண்டும், இந்தியர்களுக்குச் சொந்தமான தெதுவும் இந்தியக் கல்வி முறையில் சேரலாகாது என்ற அடிப்படையின் மீதே இந்தியக் கல்விமுறை தோற்றுவிக்கப் பட்டது. வேறுவகையில் இந்தப் பெருங்கேட்டிற்குச் சிறிதளவு பரிகாரம் இருந்தது. தனிப்பட்டவர்கள் பழைய சம்பிரதாய முறையில் பழைய கல்விச்சாலைகளைத் தொடர்ந்து நடத்திவந்தார்கள். வடமொழி இலக்கியமும் தத்துவ சாஸ்திரமும் நன்கு மதிக்கப்பெற்றுப் பொது மக்களுடைய ஆதரவு பெறத்தக்கவை என்று கருதப்பட்ட காலம் முதல் நடந்துவந்த காசி மகாராணி கலாசாலை முதலிய அரசாங்கக் கலாசாலைகள் சில இருந்துவந்தன. கீழ்த்திசை ஆராய்ச்சியில் வல்லவர்களான ஐரோப்பியர் சிலர் இரண்டு மூன்று தலைமுறைகளாகச் சமஸ்கிருத இலக்கியத்திலும், பிராகிருத இலக்கியத்திலும் ஆராய்ச்சிகளை நடத்திவந்தார்கள். பண்டைய இந்தியக் கலையில் மறைந்து போயிருந்த பெருஞ் சிறப்புக்களையெல்லாம் சாசன ஆராய்ச்சியாளர் வியக்கத்தக்க முறையில் வெளிப்படுத்தி

வந்தார்கள். இவை யாவும் மேற்சொன்ன பரிகாரத்தைத் தந்தன. தவருன முறையிலே தொடங்கி யிருந்தபோதும் கூட, இந்தியக் கல்விமுறை பொதுவாக நல்ல பயனை விளை வித்திருக்கிறது. ஆயினும்மக்களுள்பெரும்பகுதியினர் கல்வி பெறுவதற்கு அது எதுவும் செய்யவில்லை. மேலைநாட்டு மோகத்தில் முதலில் இந்தியர்களே சிக்கிக்கொண்டார்கள். தங்களுடைய ஆடையைக் கொளுத்திவிட்டுப் பூர்ணமாக மேலைநாட்டு ஆடை அணிந்தால்தான் நாட்டுக்குவிமோசனம் என்று சிறிது காலம் கருதினுர்கள். இந்தக்கருத்து மாறிவிட்டது. எது உண்மை எது சிறந்தது என்ற சரியான உணர்ச்சி ஏற்பட்டுவருகிறது. முன்னேற்றம் காரணமாகச் சிறந்த பயன் ஏற்படவேண்டுமானுல், மற்ற நாடுகளை மேற்போக்காகவும் கண்மூடித்தனமாகவும் பின்பற்றுவதனுல் சீர் திருத்தமும் புனரமைப்பும் உண்டாகமாட்டா என்றும், இவை நமக்குள்ளிருந்தே பிறக்கவேண்டும் என்றும் இப்போது மக்கள் உணரத் தலைப்படுகிருர்கள். இந்திய மொழிகள் யாவும் ஒவ்வொன்ருகத் தற்காலக் கல்வி முறையின் பயனை உணரத் தொடங்குகின்றன. சென்ற முப்பது நாற்பது ஆண்டுகளாக எழுதப்பெற்ற நூல்களில் இயற்கையோடு ஒட்டிய அறிவுக்குப் பொருத்தமான போக்கும் பகுத்தறிவுணர்ச்சியும் காணப்படுகின்றன. பிற நாடுகளில் தோன்றிய கீழ்த்தர ஆபாசமான இலக்கியப் பகுதிகளைப் பின்பற்றியும் தழுவியும் எழுதப்பெற்ற நூல்கள் இல்லாமலில்லை. ஆயினும், நூல்களில் பொதுவாக நல்லறிவும் உறுதியுமே ஓங்கி நிற்கின்றன. அன்னிய அரசாங்கத்தாருக்கும்,தங்கள் உரிமையை வரவரத்தெளிவாகஉணர்ந்து, தங்கள் விவகாரங்களைத் தாங்களே நடத்திச் செல்வதற்குள்ள தங்கள் திறமையையும் உணர்ந்து வருகிற மக்களுக்கு மிடையில் பொருளாதாரத் துறையிலும் அரசியல்

துறையிலும் வேறுபாடுகளும், ஒற்றுமைக் குறைவும் ஏற் படுவது சகஜம். இந்திய நன்மையை இந்தியாவை ஆளும் பிரிட்டிஷார் அதிகமாக நாடுவார்கள் என்று எதிர்பார்ப் பது சரியல்ல. பிரிட்டிஷ்காரருக்குத் தர்மகர்த்தா பாத்தியம் உண்டென்றும் சாம்ராஜ்யத்தில் இந்தியாவுக்குச் சமபங்கு உண்டென்றும் அடிக்கடி சொல்வதெல்லாம் அர்த்தமற்ற பேச்சு. சமீபகாலத்தில் ஆங்கிலேய அரசியல் தத்துவ ஞானி ஒருவர், ஒருவேளை இந்தியாவை எண்ணித்தான் போலும், பின்வருமாறு சொன்னர்: "ஒரு நாட்டு மக்களை அவர்களே ஆள்வதென்றால் அதில் அர்த்தமிருக்கிறது, உண்மையுமிருக்கிறது. ஆனல், ஒரு நாட்டு மக்களை மற் ரொரு நாட்டார் ஆள்வதென்பது இல்லவேயில்லை, இருக்க வும் முடியாது. ஒரு நாடு மற்ரொரு நாட்டைத் தான் வளர் வதற்கேற்ற இடமாகவும், தன் சொந்த உபயோகத்துக்காக வும், தனக்குப் பணம் சம்பாதிப்பதற்கு ஏற்ற இடமாகவும், தன் மக்களுடைய லாபத்திற்காக வேலை செய்கிற மனிதக் கால்நடைகள் அடங்கிய கொட்டிலாகவுமே வைத்திருக்க லாம்." ஆனல் ஒரு நாட்டு மக்களை மற்ரொரு நாட்டார் இந்த முறையில் வைத்திருக்கும் காலம் போய்விட்டது. தவிர, மக்கள் தாங்கள் நீண்டகாலம் எதை அனுபவித்துப் பழக்கமாகி விட்டதோ, அது இல்லாமல் வாழமுடியாது. இதுவே இன்று இந்தியப் பிரசினையில் உள்ள சார மாகும்.

பிரிட்டிஷ் இந்தியாவிலே நடைபெறும் ஆட்சியானது மிக்க திறமை வாய்ந்ததென்றும் குற்றமில்லாததென்றும் பிர மாதமாகப் புகழ்ந்து வந்திருக்கிருர்கள். இதற்காக எத் தனையோ ஆண்டுகளாக இந்தியா கொடுத்துவந்திருக்கும் சம்பளமானது, இந்தியாவினும் அதிகச் செல்வமான நாடு

களில்கூடக் கொடுக்கப் பெறவில்லை. ஆனால், இந்த ஆட்சி யின் திறமையை ஆராய்ந்து பார்த்தால் அவ்வளவும் வெறும் மாயை என்பது புலப்படும். இந்தியாவின் பண்டைய சரித்திரம் அதிகமாய்த் தெரிய வரவர, அரசியல் நிர்வாக மென்பது நம் நாட்டில் புதிய கலையல்ல என்பதை நாம் உணர்வோம். பிரிட்டிஷ் ஆட்சியில் அரசியல் நிர்வாகம் பொதுவாக ஒழுங்காயிருந்திருக்கிறது என்பதை எல்லோ ரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால், மக்களுடைய நன் மையை ஓங்கச் செய்வதையே முதல் காரியமாகக் கொள் வதனால் பிறக்கவேண்டிய ஊக்கமும் ஈடுபாடும், இந்த நிர் வாகத்தில் இல்லை யென்பது தெளிவு. தவிர, இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் அரசியல் நிர்வாகிகள் தங்களுக்குப் புகழ் வரும்படியாக நடந்துகொள்ளாத எத்தனையோ சந்தர்ப்பங் களையும் குறிப்பிடமுடியும்.

அரசியல் சீர்திருத்தத் துறையிலே, இந்தியாவில் சென்ற நூற்றாண்டில் ஆரம்பமாகிவந்த சட்டசபைகள் தொடங் கிக் கிரிப்ஸ் திட்டங்கள்வரையில் பிரிட்டிஷ் கொள்கைகள் வெளியான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவர்கள் அளித்த உரிமைகள் மிக்க காலத் தாழ்ச்சி பெற்றும் மிக மிகக் குறைந்தும் உள்ளன என்பது விளங்கியிருக்கிறது. குறித்த லட்சியத்தை நோக்கி இந்தியா முன்னேறுவதைத் தடைப்படுத்துவதற்காகப் பெரிய அந்தஸ்திலுள்ளவர்கள் மறைமுகமாக எவ்வளவோ காரியங்களைச் செய்துமிருக் கிறார்கள். ஒரே தலைமுறையில் ஏற்பட்ட இரண்டு உலக மகா யுத்தங்கள் காரணமாகவும், இவற்றுக்கிடையில் இந் திய அரசியலில் மகாத்மா காந்தி தோன்றியிருப்பது காரண மாகவும், இந்தியாவில் பிரிட்டிஷாருடைய வேலை எளிதாக இல்லை. மேலைநாட்டாரின் செல்வநிலை எவ்வளவு போலி

யான ஆதாரத்தின்மேல் வளர்ந்திருக்கிறது என்பதை இந்த யுத்தங்கள் வெளிப்படுத்திவிட்டன. கீழைநாட்டு நாகரிகத்தின் மந்தமான கதியே நல்லதுஎன்றும் இவை நிரூபித்துவிட்டன. இந்திய அரசியலில் காந்தியடிகள் தோன்றிய நாள் முதல் மற்றவர்கள் ஒதுங்கிக்கொள்ளும்படி நேர்ந்துவிட்டது. இது எதனுல் என்ருல், இந்தியாவின் உண்மையான தத்துவம் அவரிடத்தில் வெளிப்படுகிற மாதிரி இக்காலத்தைய தலைவர் வேறு யாரிடமும் வெளிப்படவில்லை.

இப்போது அவர் சிறையில் அடைக்கப்பெற்றிருப்பதில் ஒரு சோகமான பொருள் புலப்படுகிறது. இது இந்தியாவின் ஜீவனையே ஒடுக்கி விட்டது ஒக்கும். இந்த ஜீவன் முன் போல உலகத்தில் சுதந்திரம் பெருவிட்டால், உலகத்துக்கு அமைதியும் பாதுகாப்பும் ஏற்படுவது அருமை.

[*1944 பிப்ரவரி மாதம் எழுதப் பெற்ற கட்டுரை. ஆங்கிலத்தினின்றும் மொழிபெயர்க்கப் பட்டது.*]

குமரி மலர் 15-வது புத்தகத்திலிருந்து
எடுத்து அச்சடிக்கப்பட்டது (30 பிரதிகள்)